8382

# விவேகபோதினி


| வருஷச் சந்தா | |
|---|---|
| உள்நாடு | ரூ. 4 |
| வெளிநாடு | ,, 5 |
| தனிப்பிரதி | அ. 6 |

"எப்பொரு ளெத்தன்மைத்
தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."
—திருவள்ளுவர்.

| விளம்பர விகிதம். | |
|---|---|
| முழுப்பக்கம் | ரூ. 8 |
| அரைப்பக்கம் | ,, 5 |
| கால்பக்கம் | ,, 3 |

தொகு XI } காளயுக்திஞூ கார்த்திகைமீ :: 1918-ஞூ டிசம்பர்மீ { பகுதி 6


## பேரகத்தியனார்

### AGASTHYA THE GREAT

பண்டவுணர் மூழ்கினர் படார்களென வானோர்
எண்டவ வெமக்கருள் கெனக்குறையி ரந்தார்
கண்டொருகை வாரினன் முகந்துகட லெல்லாம்
உண்டவர்கள் பின்னுமிழ்க வென்றலுமு மிழ்ந்தான்.

தூயகட னீரடிசி லுண்டது துறந்தான்
ஆயவத லாலமரு மெய்யுடைய வன்னான்
மாயவினை வாளவுணன் மாயவவன் வன்மைக்
காயமினி துண்டுலகி னாரிடர்க ளைந்தான்.

யோகமுறு பேருயிர்க டாமுலைவு றுமல்
ஏகுநெறி யாதெனமி தித்தடியி னேறி
மேகநெடு மாலைதவழ் விந்தையெனும் விண்டோய்
நாகமது நாகமுற நாகமென நின்றான்.

மூசாவு சூடுமுத லோனுரையின் மூவா
மாசிறவ வேகெனவ டாதுதிசை மேனாள்
நீசமுற வானினெடு மாமலைய நேரா
ஈசனிக ராயுலகு சீர்பெறவி ருந்தான்.

உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவியி னும்மரபி னாடி
நிழற்பொலிக ணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
ழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்.

விண்ணினி லிலத்தினில்வி கற்பவுல கிற்பேர்
எண்ணினி லிருக்கினிலி ருக்குமென யாரும்
உண்ணினை கருத்தினையு றப்பெறுவெ னாலென்
கண்ணினி லெனக்கொடுக ளிப்புறும னத்தான்.

இரைத்தமறை நான்கினொ டியைந்தபிற யாவும்
நிரைத்தநெடு ஞானநிமிர் கல்வியொடு நாளிட்
டுரைத்துமய னாலுமறி யாதபொரு ணோர்கின்
றுரைக்குதவு மாலெனுமு ணர்ச்சியினு வப்பான்.

உய்ந்தன ரிமைப்பிலரு யிர்த்தனர்த வத்தோர்
அந்தண ரறத்தினெறி நின்றனர்க ளானா
வெந்திற லரக்கர்விட வேர்முத லறுப்பான்
வந்தனன் மருத்துவ னெனத்தனி வலிப்பான்.

எனையுயி ராமுதல யாவுமிடை வேவித்
தூனுகர ரக்கருரு மைச்சுடுசி னத்தின்
ஆனவன லைக்கடித வித்துலக ளிப்பான்
வானமழை வந்ததென முந்துறும னத்தான்.

*　　*　　*　　*

*　　*　　*　　*

எண்டிசையு மேழுலகு மெவ்வுயிரு முய்யக்
குண்டிகையினிற் பொருவில் காவிரி கொணர்ந்தான்.

—கம்பராமாயணம்.

: உள்ள பிள்ளை உரலை நக்கிக்கொண்டிருக்க, மற்றொரு பிள்ளைக்குத் திருப்பதிக்கு நடக்கிறாள்.

விவேக போதினி

தொ.11] காளயுக்தி௵ கார்த்திகை௴ [ப. 6

# பலவற்றி லொற்றுமை

## UNITY IN DIVERSITY

அயன்கரக்கு மாயர்சிரா யத்தனையுந் தானா
நயன்கரந் தாயருள நட்டான்—வியனுருவைக்
கௌவங் கருத்தடக்கிக் கண்டார் பெரும்பிறவிப்
பௌவங் கடக்கும் புணை.

பரம்பொருளின் சேஷ்டிதங்களையே கண்ணன் இதுவரைக் காட்டி வந்ததை யாம் கவனித்து வந்தனம். அவர் தமது இளம் வயதில், ஸாதாரணக் குழந்தைகள் போலல்லாது அற்புதமான செயல்களையே செய்து வந்தனர் என்பது யாமறிந்ததே. வாயைத் திறந்து வையமெல்லாங் காட்டி, யசோதையை அவர் களிப்பித்தனராயினும், தமது மாயாவிலாஸத்தால் அது அவளுக்குத் தோன்றாது விளங்கவே செய்தனர். எனவே எவரும் "இது. அதிசயக் குழந்தை" யென்றே எண்ணும்படி செய்து வந்தனர். அச்செயல்களிலெல்லாம் அவரது வரம்புகடந்த பராக்ரமத்தின் பெருமையே வெளித் தோன்றின. ஆனால் ஜனங்கள் அக்குழந்தையிடம் அன்பும் மரியாதையும் கொண்டு விளங்கினர்; கம்ஸனும் வெறுப்பும் பகையும் பாராட்டி அதைக் கொல்ல வழிதேடி வந்தனன். ஆனால் எம்பெருமான் தமது ஸர்வாந்தர்யாமித் தன்மையை இதுவரை வெளியிட இடம் ஏற்படவில்லை. அச்சமயங்கள் என்று கிடைக்கும் என ஆவலோடு விளங்கினவர்களும் உளர்.

தமது ஆயச் சிறுவருடன் அகாஸுரனது வாயிலிருந்து வெளிவந்ததும், ஆற்றங் கரையில் முன் போலவே மாடுகளையும் கன்றுகளையும் மேயவிட்டுவிட்டு, அவர் சிற்றுண்டிகளைத் தின்று விளையாடி வந்தனர். அதே ஸமயம் அவர் தமது இடையிற் செருகிவைத்திருந்த புல்லாங் குழலைக் கையில் வைத்த வண்ணமாகவே, தம்மைச் சுற்றிவிளங்கிய கோபாலர்கள் பரிந்து பரிந்து ஊட்டிய உணவை இளங் குழந்தைபோல ஏற்றுக் குதூஹலத்துடன் விளங்கினர். அக்காட்சியைக் கண்ட தேவரும் அளவு கடந்த ஆநந்தமடைந்தனர்.

நிற்க, இருந்தாற்போல விருந்து தமது முன்னிருந்த மாடுகளும் கன்றுகளும் இல்லாது போக, ஆயச்சிறுவர் கவலை கொண்டனர்; தமது உணவையுங் கொள்ள மனங் கொள்ளாது தயங்கினர்; நெஞ்சம் அழிந்தனர். அவரது துயரத்தில் ஈடுபட்ட எம்பெருமான் அவரைத் தேற்றிக் கன்றுகளையும் மாடுகளையும் தேடக் கையிலிருந்த உண்டியுடன் காட்டிற்குள் சென்றனர். அவற்றைக் காணாது திரும்பிய அவர், தமதிடம் வந்து நோக்க, அங்கு ஆயச் சிறுவர்களும் இல்லாது விளங்க, அவரும் கன்றுகளும் மறையக் காரணம் யாதெனச் சற்றே யோசித்தனர்; அது பிரஹ்மாவின் வேலையென எண்ணினர்; தமது வைபவத்தை வெளியிட நிச்சயித்தனர்.

குழந்தைகளும் மாடுகளும் கன்றுகளும் இல்லாது அவர் வீடு திரும்பில் எவ்வளவு துயரத்திற்குப் பிருந்தாவனம் உட்படும்? பசுக்கள் இல்லாது ஆயர் என் செய்வர்? சிறார்களைக் காணாது தாய் தந்தையர் என்ன துயரம் அடைவார்கள்? "கண்ணா! குழந்தை எங்கடா?" என்று கேட்டவர்க்குப் பதில் என்ன சொல்வது? பிரஹ்மாவின் செயலை எப்படிச் செயலறச் செய்வது? எவ்வுயிர்க்கும் உயிராகும் எம்பெருமானுக்கு இவை யனைத்தையும் ஒருங்கே கவனிக்க உள்ளம் அன்பு மடைபாய்ந்து அவாவுடன் விளங்கியது. அவனன்றி ஓர் அணுவு மசையாதன்றே! ஆகவே அவர் தமது தெய்வீகப் பிரபாவத்தின் பெருக்கினால், தம்முடன் வந்த சிறுவர் கன்றுகள் மாடுகள் இவற்றின் உருக்கொண்டு, அவ்வவரின் உரிமையாளரது துயரத்தைப் போக்கினர்; ஒவ்வொரு வீட்டிலும் கன்றும் மாடும் சிறுவனுமாகத் தாமே விளங்கினர்; தாம் சிருஷ்டித்த உருவுடன் தாமே குலாவி விளையாடி ஆயமக்களது அன்

உள்ளதைச் சொன்னால் உடம்பெல்லாம் புண்ணும்.

பிற்குப் பாத்திரராயினர்; அதன் பெருமையைத் தன்னுருவில் மயங்கும் தபோதனர் அன்றி யார் அறிய முடியும்?

மற்றுக் கண்ணனது தெய்விகத்தைக் காணவென்று, பிரஹ்மதேவர் மலைக்குகையில் மறைத்துவைத்த ஆயரும் மாடு கன்றுகளும், தமது ஜீவனாகிய கண்ணனைப் பிரிந்து, சவமென அங்கு விளங்கினர். அவரது பிராணாதாரமான எம்பெருமான் தமது யோகப் பெருக்கால் அவரது சுவாஸங்களைத் தம்முள் ஏற்றுச் சற்றும் அவர் துன்பமறியாது விளங்கச்செய்த அருள் பிரபாவத்தை அளக்க வல்லார் யார்? அதனாலன்றே அவர்க்கு அடியார்க்கடியன் என்னும் நாமமும் உண்டாயிற்று! அவ்வருள் பிரபாவத்தை அறிய, தக்க மனோநிலைவேண்டுமென்பதற்கும் பலபத்திரனே ஆதாரம். அவர் தமது கண்ணனிடம் கொண்ட அன்பிற்கு இணை என்பது கிடையாது. எனினும், புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்ட கன்று மாடுகளிடமும் இடைச்சிறுவர்களிடமும் தமக்கு அன்பு வரவர விருத்தியாகி, அவற்றிடம் தமக்குக் கண்ணனிடமிருக்கும் அன்பிற்கீடான அன்பாகக் காரணம், கண்ணபிரானது பெருமையே என அவர் கண்டனர்; "இப்பசுக்கள் ஸாதாரணமானவை யல்ல; அளவுகடந்து பால் தருகின்றன; சாந்தமே குடிகொண்டிருக்கின்றன. அவற்றிடம் கோபாலர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அன்பு முன்பிருந்தாற்போல இல்லை; அபாரமாக விளங்குகிறது. இச்சிறுவரிடம் அவர் தாய் தந்தையரேயன்றி யானும் அளவுகடந்த அன்பு கொண்டு விட்டேன்; அது கண்ணனிடத்ததேபோலிருக்கிறதே! இது என்ன?" என அவர் எண்ணினர்; தமது மூல உருவில் நிலைத்துச் சற்றே ஆழ்ந்து நோக்கினர்; "அகோ! இது மாயை! அவ்வுருவங்கள் முற்றும் கண்ணனது வெளித்தோற்றம். இவற்றை இந்தக் கோபாலர்கள் சிறிதும் உணராது விளங்குகின்றனரே! என்ன அதிசயம். அது கண்ணபிரானது கரந்துறையும் தன்மையின் விசேஷத்தையே வெளியிடும். பரமதயாளுவாகிய எம்பெருமான் ஏன் இவ்வுருக்கொண்டு இக்கோபாலர்களை மயக்கவேண்டும்?" என எண்ணி ஆனந்தபரவச மடைந்தனர்; கண்ணபிரானது பெருமையைத் துதித்து விளங்கினர்.

இவ்வாறு கண்ணபிரான் தம்முருவைக் கரந்து ஆயர் வீட்டில் விளங்கிய பெருமை அதிசயமானது. அவ்வவர் வீட்டுச் சிறுவனும் செய்யும் காரியங்கள் யாவும் அவ்வவர் செய்யுமாறே செய்வர்; அவர் தமது தாய் தந்தையரிடம் விளங்கும் மாதிரியாகவே விளங்குவர்; அவர் விளையாடிய விதமே விளையாடுவர்; அவர் செய்த குறும்புகளையே செய்து, தாய் தந்தையரைக் களிப்பிப்பர்; அம்மாயச் சிறுவருடன் தாமுங் கலந்து விளையாடிக் காட்டிற்குச் சென்று மாடுகளை மேய்த்துத் தமது குழலை ஊதிக்கொண்டு வீட்டிற்குத் திரும்புவர். அப்போது ஊரிலுள்ளார் எல்லோரும் தமது குழந்தைகளே வந்ததென அன்பு பெருகி அவற்றை ஆதரிப்பர். அக்குழந்தைகளை மடியில் வைத்துப் பாலூட்டி உச்சி முகந்து ஆனந்தமடைந்த அத்தாய் தந்தையரின் களிப்பில் கண்ணனும் ஈடுபட்டு விளங்கினர் என்றால் அவர் புகழ்க்கு வரம்பாமோ? அத்புத காரியங்களையும் செயல்களையும் செய்யு மஹாத்மாக்கள் தமது தன்மை அவற்றுள் தோன்றாது முழுதும் தோன்றச்செய்யுமாறே கண்ணபிரான் தமது உருவை அம்மாயச் சிறாரிடம் கரந்தும் கரவாது விளங்கினர். அதைக் கண்டு உளம் நெக்கிடவென்றல்லவா பிரஹ்மாவும் கன்றுகளையும் மாடுகளையும் குழந்தைகளையும் குகையில் அடைத்து வைத்தது?

நிற்க, பிரஹ்மதேவர் தம்மால் அடைக்கப்பட்ட சிறுவர் முதலியவர்கள் கிடக்க, எம்பெருமான் தமதுருவின் பெருமையால் தாமே கோபாலர்களாகவும், கன்றுகளாகவும் மாடுகளாகவும் தவழ்ந்து பிருந்தாவனத்துள் ஆனந்தம் விளங்கச் செய்ததைக் கண்டனர்; தமது செயல் சிறிதும் பயன்படாதுபோனதை யுணர்ந்தனர்; சிந்தை யழிந்து சற்றே கண்மூடி மௌனியாய் விளங்கினர்; அந்நிலையி லிருக்கும்போது அவர் கண்ட தெய்வக் காட்சியைக் கருத்திலெண்ணினர். அவர்முன் அப்போது அந்தபிருந்தாவனம் இணையற்ற உலகமாகப் பட்டது. அங்கு ஸர்வப் பிராணிகளும் பகையின்றி உள்ளன்போடு விளங்க, பக்த பராதீனனாகிய கண்ணன் தமது நண்பரைத் தாம் கையில் கொண்ட அன்ன கபளத்துடன் தேடுவதாக அவர் கண்டனர். அளவுகடந்த அன்புடன் அவர் தமது ஆசைக்கு உகந்தவரைத்

தேடுவதைநோக்க, அவரது லீலாவைபவத்தைக் காணவெனச் செய்த செயலை எண்ணி எண்ணி நெஞ்சமழிந்து தமது கண்ணைத் திறந்து பார்த்தனர்; பக்தர்களை ரக்ஷிக்கவெனக் கங்கணங் கொண்ட அப்பரமேஷ்டியாகிய பரம்பொருள் கையிற்கொண்ட அர்த்த அன்னகபளத்துடன் அங்கு எதிரில் வெகு கவலையுடன் ஆயச்சிறுவரைத் தேடிவருவதைக் கண்டனர்; கைகளைக் குவித்திறைஞ்சி மனம் வாக்குக் காயம் எனும் திரிகரணங்களும் மலமற்று விளங்கத் துதிப்பாராயினர்:

"அத்தனே! உலக நிறைகின்ற பொருள் தாங்களே அன்றே! உமது அன்பின் பெருக்கை அளவிடவல்லார் யாவர்? ஒன்று மறியாத இளஞ் சிறுவன்போலே இப்பாதைகளில் தமது திருவடி தோய நடப்பதற்கு இப்பூமிதேவி செய்த பெரும் புண்ணிய மிருந்தவாறு என்னே! கொண்டல் வண்ணா! முண்டகம் ஒத்த கண்ணா! மின்னலொத்த வடிவா! மயிர்ப்பிச்சங்களை முடித்த இறைவா! வனமாலை தரித்து அன்பர் உளமே தரித்த தலைவா! வெண்ணெயுண்ட வாயா! வேயூதும் நெடுமாலா! வித்தக பாலா! ஆயர்தம் தலைவா! அருமறையின் முதல்வா! உமது உண்மையுருவை உள்ளம் துறந்தபெரியோர் அன்றேஅறிவர்! இச்சைபால் பட்டுழலும் எம்போல்வார் காண்பதற்கு ஆகுமோ? சிந்தையை யடக்கிச்சும்மாவிளங்கு மிடத்தைவிட்டு, மந்தையை யடக்கிக் குழலைத் தரித்த கையா! பலவற்றுள் ஒன்றாயும், ஒன்றில் பலவாயும் விளங்கும் உமது அந்தர்யாமிநிலையைக் காண்பது அரிதன்றே! குறையற்று, பற்றொழிந்த, பரமயோகிகள் ஸதா கண்டு களிக்கும் உமது உருவை யான் அறிவேனோ? முதலும் முடிவுமற்றவனே! அந்தோ! என்மடமை வெறுக்கத்தக்கதன்றே! எங்கு நிறைகின்ற பொருளாகிய தம்மைக்காணும் சக்திவாய்ந்திருந்தும், எனதுமாயையை, எல்லா மாயைக்கும் இருப்பிடமாகிய தங்களிடமே காட்டினனல்லவா! அவ்வாறு செய்தது தவறே! எனினும், தமது பெருமைப் பெருக்கின் பிரபாவத்தைக் கண்டு களிக்கவென்றே செய்தனன். என்னை மன்னிப்பீரென்பது நிச்சயம். அண்ட புவனங்கள் எவற்றிற்கும் காரணமாகிய தாங்கள், என்னிடம் கோபிக்க மாட்டீர். தாங்களே நாராயணன். தங்களிடமிருந்தே யான் தோன்றினேன். தமது வயிற்று அடக்கிய புவனங்களை வெளிப்புறத்தே தோற்றிவைத்துத் தாங்களும் அதனுள் தனித்து விளங்கும் பெருமையைக் காண்பது தவறாகாது. அதற்காயிரங் கண்க ளிருப்பினும் போதா. உள்ளன்பிலாவிடின் அக்காட்சி மறைந்திடுமன்றோ? ஆகையால் யான் உன் அடைக்கலம். கொடியாரை மடுத்து அடியாரை அடுத்து ஆளும் அன்பனே! அன்பினிடை யூறும் ஆனந்த வெள்ளமே! அவ்வெள்ளத்தில் ஆழ்ந்து குளிக்க யாவரே விரும்பார்? மனமொழி மெய்களால் பாசமற்று அப்பெருக்கில் மூழ்குவார்க் கல்லவா, ஜடமொழிந்து மோக்ஷம் ஏற்படும்?"

இவ்வாறு துதி செய்த பிரஹ்மா, கண்ணனது பாதங்களில் வீழ்ந்து படிந்து மறைந்தனர். அதே ஸமயம், காட்டில் மீண்டும் கொண்டுவிடப்பட்ட சிறார்கள் தாம் நெடுநாள் குகையுள் மறைந்துகிடந்த விஷய மின்னதென்றறியாது, தூக்கத்திலிருந்து எழுந்தவர் போலக் 'கண்ணா! கடல் வண்ணா! எங்கள் அண்ணா! எங்கு போய் விட்டாய்? உண்ணாமல் நாங்கள் காத்திருக்கிறோம். நீயில்லாது உணவு எங்களுக்கு எப்படிப் பிடிக்கும்? மாடுகளைத் தேடிச் சென்றனையே! நீ எங்கு போய் விட்டனை? எத்தனை நாழியாயிற்றே! இக்கரடு முரடான இடத்தில் கன்றுகளையும் மாடுகளையும் தேட உன்னை விட்டு விட்டு, என்ன மூடத்தனம்! நாங்கள் இங்கே இருந்து விட்டோம். உனது இனிய மழலையும், குழலின் இனிய ஒலியையும் கேளாது நாங்கள் வருந்துகிறோம். எங்கள் ஐயனே! எங்கு போய் விட்டாய்? சோறுண்ண உமக்காகக் காத்திருக்கிறோம்! கிருஷ்ணா! எங்கிருக்கிறாய்! பதில் கூடவில்லையே!" என்று யாவரும் "கிருஷ்ணா! கிருஷ்ணா!" எனக் கூவினர்.

எண்ணுவார் எண்ணத்துள் எண்ணியபடி தோன்றும் அவ்வெம்பெருமான் அச்சமயம் கன்றுகளும்மாடுகளும் தம்மைச் சூழத் தமது இனிய புல்லாங்குழலை வாயிலிட்டு, அந்தக் கவலைகொண்ட சிறுவர்களது மனதில் சாந்தி குடிகொள்ளுமாறு ஊதினர். அதன் இன்பம் பயக்கும் நாதத்தைக் கேட்டு அவரைக் கண்டு களித்த ஸர்வஜீவராசிகளும் ஆனந்தம் அடைந்தன. கண்ணனது வரவைக் கண்டதும் குதித்

உள்ளனும் கள்ளனும் கூடினால் விடிகிறமட்டும் திருடலாம்.

துக் குதித்துக் கூத்தாடி அச்சிறுவர் ஓடி எதிர் கொண்டனர். தமக்காகக் கண்ணன் செய்த பெருமையை அவரெப்படி யறிவர்? தாம் எங்கிருந்தனர் என்பதையாவது, எவ்வளவு நாள் அங்கிருந்தனர் என்பதையாவது அவருள் உணர்ந்தவர் எவர்?

கண்ணன் தமது பரிவாரத்துடன் வீடு திரும்பும்போது வழியேயிருந்த அகாஸுரனுடைய தோலைக் காட்டிக் களிப்பித்தனர். வீட்டையடைந்த ஆயச் சிறுவர் தம்மைக் கண்ணன் அன்று பாம்பின் வாயிலிருந்து வெளியிட்டுக் காப்பாற்றியதாகச் சொல்லிக்கொண்டாடினர். அப்போது கோபாலர்கள் அதிசயப்படக் காரணம் யாதோ?

---

# மஹாராஜா ஸர் ராமவர்மா, ஜி. ஸி. எஸ். ஐ.

## MAHARAJA SIR RAMAVARMA, G. C. S. I.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம், அச்செல்
செல்வத்துள் எல்லாந் தலை [வம்

என வள்ளுவனார் கூறிய தெய்வமொழியையே உறுதிமொழியாக நடப்பது, என்றும், எவர்க்கும் எவ்விடத்தும் நலம் பயக்கும். இதன் பெருமை யாராலும் மறுக்கமுடியாது. ஆகவே அதைத் தனவந்தர்கள் "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் * * * கற்றல் நன்றே" என்பது தவறாகாது. ஆனால் செல்வமும் கல்வியும் ஒன்றிவிளங்கா என்பது பொதுமொழியாயினும், காலஞ்சென்ற திருவனந்தபுரம் மஹாராஜா ஸர் ராமவர்மா அவர்களிடம் இவ்வசைமொழி தொடர இடமில்லாதாயிற்று.

இவர் 1837-ம் வருஷம் மேமீ 19உ பிறந்தவர். இவர் தந்தை, திருவள்ளம் கோயில் தம்புரான்களின் வம்சாவளியில் தோன்றியவர்; வடமொழியிற் பூர்ண பாண்டித்திய மடைந்தவர்; ஆங்கிலத்திலும் சற்றேறக்குறைய நல்ல ஞானம் பெற்றவர். மஹாராஜா அவர்களது தாய், வடமொழியில் எளிய நடையில் கவிபாடும் திறம் வாய்ந்தவள். மஹாராஜாவுடன் உடன் பிறந்தவர் அறுவர். மூவர், அவர் பிறப்பதற்குச் சற்று முன்னே நமனுக் கிரையாயினர். மற்றிருவர் பித்தர்களென விளங்கினர். எனவே, தன் கடைசி மகனாகிய ராமவர்மன் பிறந்ததும் அவள் அடைந்த மனோ வியாகூலத்திற்கு அளவே கிடையாது. அதனாலேயே ஒருவேளை குழந்தை பிறந்த இரண்டு மாதத்திற் குள்ளாகவே அவள் காலகதி யடைந்தனள் போலும். ஆகவே, குழந்தை சின்னாளிலிருந்தே தேக திடமில்லாமல் விளங்கியது. அப்போது அதைக் கவனிக்கும் பெரும் பாரம் அவரது பெரிய தாயாரின் பொறுப்பாயிற்று.

தெய்வ ஸங்கல்பத்தினால் குழந்தை வளர்ந்து வர, ஐந்தாவது வருஷத்தில் மலையாளத்திலும் வடமொழியிலும் அக்ஷராப்யாஸம் செய்யப்பெற்று, ஒன்பதாம் வயதில் ராமவர்மன் அக்காலம் ஆங்கிலம் கற்பிப்பதில் புகழ்பெற்ற மாஜி திவானாகிய இங்கிலீஷ் சுப்பராயரிடம் ஆங்கிலம் கற்றனர். படிப்பிற்கு இடையிடை தேக அசௌக்கியம் தடையாயிருப்பினும், அவர் அதைப் பாராட்டாது தனக்கிட்ட வேலையை ஒழுங்குபெறச் செய்வதிலேயே கண்ணா யிருந்தனர். தொட்டதை அரைகுறையாக விடுவது அவர் சுபாவமல்ல; அவர் தந்தையின் கண்டிப்பான மேற்பார்வையால் முடியவும் முடியாது. எனவே, இளம் பருவத்திலேயே மஹாராஜா அவர்களுக்கு மனோ வன்மையும், எடுத்தவற்றைச் சரிபெறச் செய் [illegible]வாவும் ஏற்பட்டன வாயினும், அவர் நியா[illegible] அதிகாரத்துக் குட்பட்டுத் தமது உரிமை[illegible] கடந்து அதிகாரமிருக்கும் எவற்றையும் [illegible]வகு கண்டிப்பாகத் தாக்கும் தன்மை பெற்றன[illegible]. 1849-வருஷ க்ஷய வியாதி சற்றே அவரைத் தொந்தரை செய்ததாயினும், அவர் உடம்பு இளைத்ததேயல்லாமல் திடங்கொண்ட அவர் மன[illegible]ம் சற்றும் தளரவில்லை.

இதே சமயம், பிறகு திவானாக விளங்கிய தஞ்சாவூர் மாதவராயர் அவர்கள், மஹாராஜா அவர்களுக்குப் பாடங் கற்பிக்கும் தலைவராக ஏற்படுத்தப் பெற்றனர். அவர் நான்கு வருஷங்களே பா[illegible]டம் கற்பித்தனராயினும், அப்படிப்பு, புத்தகங்கள் மூலமாகப் படிக்கும் படிப்பைப்

---

உள்ளவன் பிள்ளை உப்பாடு உண்ணும், இல்லாதவன் [illegible]ள்ளை சர்க்கரையோடு உண்ணும்.

போன்ற தல்லவாயினும், அபாரமான ஞானத்தையும், தாராளமான எண்ணங்களையும், உத்தமகுணங்களையும் வளர்ப்பிக்கத் தக்கதாயும் இருந்தது. இயற்கையிலேயே படிப்பில் ஆவல் கொண்ட மஹாராஜா அவர்களுக்கு இத்தகைய கல்வி, பல துறைகளில் தோய்ந்து, லக்ஷண சாஸ்திர தத்வ ஞானங்களை விருத்திசெய்ய இடம்தந்தது. இவ்வாறு கல்வியினுலும்கேள்வியினுலும் ராயரவர்கள் மஹாராஜாவினது மனத்தை விசாலிக்க, அவரது தந்தையின் ஒற்றுமையும் காரணமென்பது கவனிக்கத் தக்கது. அவரதுஆழ்ந்தறியும்படிப்பைத் தமக்குப்பின் அவர் வைத்திருந்த அளவு கடந்த புத்தகசாலையின் ஒவ்வொரு நூலும் வெளியிடும். அவர் வியாசம் எழுதுவதில் நிபுணர். அவ்வாறு எழுதுவது அவருக்குப் பேரவா. சிறு நாளில் கிரிமியன் யுத்தகாலத்து 1850-ல்அவர் எழுதிய "யுத்தத்தின் கொடுமையும், சமாதானத்தின் பெருமையும்" என்ற வியாஸத்தை அக்காலம் திருவாங்கூர் சமஸ்தானத்துப் பிரிடிஷ் ஸ்தானுதிபதியாக விருந்த ஜனரல் கலன் மிகக் கொண்டாடினர்; இளம் வயதில் சமவயது கொண்ட சிறுவன் எவனுலும் எழுதமுடியாப் பெருமை வாய்ந்ததெனப் பாராட்டினர்.

கலன் அவர்களது மொழிகளால் உத்ஸாக மூட்டப்பட்ட மஹாராஜா அவர்கள், அக்காலம் சென்னையில் பிரக்கியாதியுடன் அம் மஹான் ஜான் ப்ரூஸ் நார்ட்டன் அவர்களால் நடத்தப் பெற்றுவந்த "எதீனியம்" என்னும் சிறந்த ஆங்கில பத்திரிகைக்கு அவர் அடிக்கடி விஷயதானம் செய்து வந்தனர். அவர் முதலில் எழுதிய "திருவனந்தபுர இ[illegible] சருக்கம்" என்னும் வியாஸம் அ[illegible]ராட்டப் சிரியரால் பெருமை வாய்ந்ததாக[illegible]த்தி விசா பட்டதே மஹாராஜா அவர்களின் பு[illegible]ல், பத்தி லத்திற்கு அறிகுறியாகும். இதுமு[illegible]ஜா அவர் ரிகைகளுக்கு எழுதுவது மஹாரா[illegible] எனினும், களுக்கு, பெரும் வழக்கமாயிற்று. [illegible] செய்யக் அவர் சாஸ்திர ஞானத்தை விருத்தி[illegible] ஓங்கி கொண்ட அவா, அளவுகடந்து[illegible]க் காண வந்தது. பரிசோதனு முறைகளை[illegible]ாஸ்திரம், அவர் உள்ளம் தவித்தது. வான ச[illegible]து தத்வ பூதத்வ சாஸ்திர பரிசோதனை, வஸ்[illegible]ாவற்றை சாஸ்திர விசாரணை, இவை முதலா[illegible]னர். கா அவர் பேரவாவோடு கற்க முயன்ற[illegible]

லம் செல்லச் செல்ல இயற்கை நூல்களையும், செயற்கை நூல்களையும் தாவரங்களின் வளர்க்கை ஒழுங்கு இவற்றையும் அவர் அறிய உழைத்தனர்.

நிற்க, 1853-ம்வருஷ அவரைத் தாயினும் சிறப்போடு வளர்த்த பெரிய தாயார் தேகவியோக மடைந்தனர். 1857-ல், அவருடைய ஓரே ஸகோதரி காலஞ்சென்ற திருவனந்தபுரம் மஹாராஜா அவர்களைப் பிரஸவித்த சில நாட்களுக்குள்ளேயே காலமாயினள். மற்றும் 1858-ல் தமது சீலம், ஒழுக்கம், கல்வி, குணம் யாவற்றுக்கும் ஊன்றுகோலாயிருந்து உதவிய உத்தமத் தந்தையை இழக்க நேர்ந்தது அவருக்கு பெருந்துன்ப மாயிற்று. இக் கஷ்டங்களையெல்லாம் கடந்ததும், தமது இருபத்திரண்டாம் வயதில் அவர் தனக்கேற்ற மனைவியைத் தானே வரித்து, மணஞ்செய்து கொண்டனர்.

இதற்குள் திருவனந்தபுரம் சமஸ்தானத்து அரசியலில் விசேஷ மாறுபாடுகள் உண்டாயின. 1857-ம்வருஷ முடிவில் சமஸ்தானத்துத்[illegible]ாக திவானுகிய கிருஷ்ணராயர் இறந்தனர்; [illegible]ஆர் மா குப் பதிலாக பிரக்யாதிபெற்ற தஞ்சா[illegible] பெற்ற தவ ராயரவர்கள் திவானுக நியமன[illegible]தானுதிபதி னர். சமஸ்தானத்துப் பிரிடிஷ் பதவியைவிட்டு யாகிய ஜனரல் கலன்[illegible]தானத்தை மிஸ்டர் பிரான் விலகினர்; அ[illegible] என்பவர் ஏற்றனர். அவரை ஷிஸ் மால்[illegible]க திருவனந்தபுரம் பெற்றது ஸ்தானிகர[illegible]திருஷ்டம் என்றே சொல்லலாம். பெரும் அதிவ, சமஸ்தானத்தில் அத்தியாவசியக வர்க்கிச் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் பல இருந்தன. இவைகளை ஏற்படுத்த மால்ட்பி, மாதவராயர் இவர்களைக் காட்டிலும் சிறந்த சீர்திருத்த நிபுணர்களை இன்னமும் அந்தச் சமஸ்தானம் பெறவில்லையென்றே சொல்லலாம். எனவே, ஊக்கம் குன்ற அவ்விருவரும் தமது தர்மத்தை நடத்தப் பேரவாக் கொண்டனர், அதற்கேற்ப உழைத்தனர். சுவரின்றிச் சித்திர மெழுதுவது போலல்லாது, அவ்விருவரது உழைப்பும் வீணுகாது ஓங்கி விளங்க, இராஜா ராமவர்மா அவர்கள் சமயத்திற்கேற்றவாறு விளங்கியது புகழத் தக்கது. நமது மஹாராஜா அவர்கள் சிறுநாள் முதல், பழகி வந்த விஷயதான வைபவம் அவர்க்கு இச்சம

---

உள்ளதை[illegible] சொன்னுல் எல்லாருக்கும் பகை.

யம் உதவியதுபோல் யார்க்குதவும்? சென்னையில் அந்நாள் ஜான் புரூஸ் நார்டன் அவர்களால் நடாத்துப்பட்டுவந்த ‘இண்டியன் ஸ்டேட்ஸ்மென்’ (இந்திய ராஜதந்திரி) என்னும் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியிலும் ப்ரூடஸ் என்னும் புனைபெயருடன் ‘மால்ட்பி யவர்களுக்கேற்ற சில குறிப்புகள்” என்னும் தலைப்பின்கீழ் அந்நாள் யாவர் மனத்தையும் கவரும்படி தமது அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தனர். மால்ட்பி அவர்களும் அக்குறிப்புகளை வெகு ஆவலுடன் கவனித்து வந்தனர். இம்மாதிரி மஹாராஜா அவர்கள் தாம் இன்னாரெனத் தெரியாது வெளியிட்ட அபிப்பிராயங்கள் இராஜாங்கத்தை அநாவசியமான வியவகாரங்களில் தலையிடாதிருக்கக் காப்பாற்றிவந்தன. இதற்குத் தென் திருவநந்தபுரத்தில் தலைதெரியாமல் பாதிரிமார்கள் அக்காலம் நடந்துவந்த சிறு கலகமே சான்றாகும். மற்று, ஸர் ஜார்ஜ் கிளார்க் என்பவருக்கு அதே சமயம் கல்வி விஷயங்களில் மத விஷயப் பற்றில்லாது விளங்குவதே அரசியலின் தருமமாகுமென்று அவர் வாதித்தெழுதிய சிறுநூலை இற்றைக்கும் படிப்பது வீணாகாது. அதேமாதிரி அவர் வடமொழியின் கல்வியேற்றத்தைப்பற்றி நார்ட்டன் துரையவர்களுக்குச் சமர்ப்பித்த துண்டுப் பத்திரிகையும் கவனிக்கத் தக்கது.

1861-ம் வருஷமுடிவில் ராமவர்மா அவர்கள் சென்னை இராஜதானியின் தலைநகரைக் காண விஜயம் செய்தனர். திருவநந்தபுரம் இராஜவம்சத்தினருள் இவரே முதன் முதல் இந்திய இராஜதானியின் ஆங்கில நிர்வாகத் தலைவரை அவரது இராஜாங்கத் தலைநகரிலேயே கண்டவர். வர்மா அவர்களுக்குப் பேட்டி கொடுத்த அக்காலத்துக் கவர்னராகிய ஸர் வில்லியம் டெனிஸன், அவரது பெருமையைக் கவனித்து “இதுவரை கண்ட இந்நாட்டினருள் அவரே சிறந்த புத்திமான். மேலும் அவர் போலவே அவர் உடன் பிறந்தவராகிய சமஸ்தானத்து மஹாராஜா அவர்களும் இருப்பாராகில், திருவனந்தபுரத்து அபிவிருத்திக்கு விசேஷ அறிகுறிகள் இருக்கின்றன வென்றே சொல்லலாம்” என, மால்ட்பி அவர்களுக்கு எழுதினர்; இப்பெருமையைப் பாராட்டி ராமவர்மா அவர்களைச் சென்னை ஸர்வ கலாசங்கத்து அங்கத்தினருள் ஒருவராக உடனே நியமித்தனர். இத்தகைய பெரும் சிறப்பு அந்நாளில் இந்நாட்டில் பிறந்தார்க்கு ஏற்படுவது அபூர்வம். இச்சமயம் ராமவர்மா அவர்களின் நேச கோஷ்டி மிகப் பெரிதாய் விளங்கியது. அதனுள் சென்னை கவர்னரும், அவரது ஆலோசனை அங்கத்தினரும் அடங்குவர். இவர்களுடன் வர்மா அவர்கள் இடைவிடாக் கடிதப் போக்குடன் விளங்கினர்.

ராம வர்மா அவர்களுக்கு யாத்திரையில் வெகுப் பிரியம். தமது சமஸ்தானத்துள் மலை, அருவி, ஆறு, கடல் முதலிய எல்லா மூலை முடுக்குகளும் அவர் கண்டு களித்தனர். அவர் கண்ணில் படாதது ஒன்றுமில்லை. இடிந்த கோபுரம், மழுங்கிய சாஸனம், கிலமான கோட்டை இவைபோன்ற காலகதியின் குறிப்புக் குறிகள் அவர் கண்ணில் படாதிருந்த தொன்றுமில்லை. ‘வைசாகம் திருநாள் வழி படாப்பொருள் ஏது?’ எனவே, ஒவ்வொரு கிராமத்து மக்களும் இந்நாளும் கூறுவது வழக்கம். சமஸ்தானத்து ராமவர்மா அவர்களை வைசாகம் திருநாளென்றே இன்றும் அழைக்கப்படுவது இங்கு குறிப்பது தவறாகாது. இவ்வாறு செய்த ஒவ்வொரு யாத்திரையிலும் அவர் தமது கல்வியையும் கேள்வியையும் விருத்திசெய்ய முயற்சித்தனரென்பது, அவர் அவ்வச் சமயங்களில் தம்மூருக்குத் திரும்பும்போது கொண்டுவந்த செடிகள், விதைகள், காட்டுக் கிளைகள், கல் மணிகள், தட்டாரப்பூச்சிகள், அடைக்கப்பட்ட பறவைகள், பலவித ஊரும் பிராணிகள் இவைகளும், தாம் கண்ட காட்சியின் அதிசய வர்ண படங்கள், தம் நாட்டில் உண்டாகும் மூலிகைகளின் சித்திரங்கள், இவைமுதலானவைகளும் நன்கு வெளியிடும். இவ்வாறு தாவரங்கள், பிராணிகள் இவற்றின் அளவு கடந்த தொகுதியிலிருந்து சிலவற்றை அயல்நாட்டு இயற்கை நூல் தத்வஞானிகளிடம் வேறு சிலவற்றிற்காக மாற்றிக் கொள்வதும் அவரது வழக்கமாக இருந்தது. அக்காலத்து பிரக்யாதி பெற்றிருந்த ஸர் ஜோஸப் ஹூக்கர், டாக்டர் ஆண்டர்ஸன், டாக்டர் கிங், டாக்டர் பென்னட், கர்னல் பக்கின், டாக்டர் த்வைட் என்னும் பல நாட்டு இயற்கை நூல் ஆசிரியருடன் அவர்

தமது அபிப்பிராயங்களை இடைவிடாது வெளியிட்டுக் கொண்டு விளங்கினர் என்பது அவர்க்குக் கல்வியிடத்திருந்த பேரவாவைப் புலப்படுத்தும்.

மேலும், அவருக்கு இயற்கை சாஸ்திரத்திலிருந்த பரிசயம், அதை அனுபவ வழியில் உபயோகப்படுத்த ஆசையற்று விளங்கவில்லை. தாவர நூலில் அளவு கடந்த அவாக்கொண்ட அவர் விவசாயத்திலும் அளவுகடந்த அன்பு கொண்டிருந்தனர். அவர், தாமே தமது முயற்சியால் நிர்மாணித்த திருவனந்தபுரத்து இளைய அரசரது அரண்மனையாகிய வடக்கக் கொட்டாரத்தைக் கண்டவரெவரும் அதனுள் பரிசோதனைக்கென்று அவர் தனியாக ஏற்படுத்திய வியவசாயப் பண்ணையும் அதில் நிறைந்து விளங்கிய பலவிதமான, அவர் தமது கைப்படத்தாமே நிர்மாணித்த சிறந்தகருவிகளையும் ஒருநாளும் மறவாரென்பது திண்ணம். திருவனந்தபுர சமஸ்தானத்துள் டாபியோகா என்னும் (Tapioca) பயிரை முதன் முதல் நடச்செய்து அதை அந்நாடு முழுவதும் செழித்து விளங்கச்செய்ததற்கு அவரே காரணம். அதற்கு அந்நாடு அவர்க்கு என்றும் கடமைப்பட்டுள்ளது. இக்கிழங்கின் உபயோகத்தையும் அதன் பலவித சிறந்த குணங்களையும் முற்றுமுணர்ந்தே அவர் அதைத் தம்நாட்டில் செழித்தோங்க உழைத்தனர். மழையற்று, நீரற்று விளங்கும் காலத்து நெஞ்சுலர்ந்து தவிக்கும் ஏழைகளுக்கு இக்கிழங்கு உதவுவது போல் அந்நாட்டில் எதுவும் உபயோகப்படாதது கண்டு அவ்விளவரசர் சென்னை கவர்ன்மெண்டாருக்கும் அம்மூலத்தின் சிறப்பையும், அதைப்பயிரிடுவதால் க்ஷாமகாலங்களில் ஜனங்களுக்கேற்படும் சௌகர்யத்தையும் வற்புறுத்திவந்தனர்; நிற்க, வர்மா அவர்கள் வேறு பல வெளி நாட்டுப் பயிர்களையும் தம் நாட்டில் செழித்து விளங்கப் பரிசோதனைகள் நடத்தி வந்தனர். அவைகள் அவர்மாட்டுத் திருப்திகரமாக விளங்கியபோதிலும், அவற்றை ஜனங்கள் பொதுப் பயிராக ஏற்கவில்லை.

இத்தகைய பரிசீலனங்களினால் மனம் விசாலித்து விளங்கிய இராமவர்மா வேறு பல துறைகளிலும் தமது ஞானத்தைச் செலுத்த ஆவல் கொண்டனர். எண்ணெய் வர்ணம், நீர் வர்ணம் இவைகளைக்கொண்டு சித்திரமெழுதல், தந்தவேலை, மரவேலை, இழைப்பு வேலை, துணிகளில் அச்சிடல் முதலானவை அவர் மனதைக் கவர்ந்த வற்றுள் சிலவாகும். முக்கியமாகச் சித்திரம் எழுதுவதில் சிறுநாள் முதல் அவர்க்கு வழக்கமாகி, வர வர, அதில் அவர்க்குத் தீர்ந்த கைப்பழக்கம் உண்டாயிற்று. ஆனால் படித்தலும், எழுதலும் அவர் காலத்தை ஸதா கொள்ளைகொண்டபடியால் இத்துறையில் அவர் தம் மனதை முழுதும் செலவிடமுடியா தாயிற்று. அவர் கல்வி சொல்லும் தரத்தன்று; அல்ப விஷயம் முதல், யாவர் மனதையும் கவரும் பெருங் கேள்விகள்வரை, அவை பரவி விளங்கின. அவர் பேசும்போது பெரியோரது வாக்கைப்பற்றி வெளியிட்ட சிறுசிறு மொழியும், குன்றிலிட்ட விளக்குபோல் யாவற்கும் விளக்கம் காட்டும். அவர் எழுதும் நடை நாள் ஏற ஏற எளிமையும், நயமும் அளவுகடந்த பொருளும் இயற்கையிற் பொதிந்து விளங்கின. டென்னிஸன், ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் என்னும் ஆங்கில நூலாசிரியர்களிடம் அவருக்கு அளவற்ற அன்பு. பொதுப்படிப்பை விருத்திசெய்ய வேண்டுமென்று இந்தியாவுக்கு உழைத்த, அந்த ஆங்கில பாஷையின் இன்ப நடையை தனக்கென்றே சுமந்து பெருமையுடன் விளங்கிய மெகாலே பிரபு அவர்களிடம் அவர்க்கு அளவற்றமதிப்பு; அவரது நடையையேதாமும் பின்பற்றினரென்பதும் அவரது முதன்முதல் ரசனைகள் வெளியிடும். ஆனால் அவ்விதமான பார நடையில் எழுதுவதில் சலிப்புண்டாகி இயற்கையாக யாவரும் உணரும்படி செம்பாகான நடையில் எழுதுவதே தமக்குத் தகுந்ததென அவர் வரவரத் தெரிந்துகொண்டனர். "மானிட ஜன்மத்தின் சிறப்பு" "இயற்கைச் செயற்கை உறவு" "நமது ஒழுக்கம்" "நமது தொழில் நிலை" இவை முதலாகிய உபந்யாஸங்களும், துலாபாரம், ஹிரண்ய கர்ப்பம், முறை ஜபம் முதலிய சடங்குகளைப் பற்றிய சிறு புத்தகங்களும் அவரது பிற்கால நடையின் பெருமையையும், அவர் மனோபாவத்தின் வன்மையையும் வெளியிடும்.

(அடுத்த சஞ்சிகையில் முடிவு பெறும்.)

உறவுபோல இருந்து குளவிபோலக் கொட்டுகிறதா?

## தேகப்பயிற்சியும் ரக்த விருத்தியும்

### PHYSICAL EXERCISE & BIOOD CIRCULATION

நீங்கள் உங்கள் சரீரத்தின் உட்புறத்தைப் பார்த்து அங்கே நடந்தேறிவருகிற செயல்களைக் காணும்படியா யிருக்குமானால் இங்குமங்கும் அசைவதனால் நமக்கு நன்மை உண்டாகுமோ என்று நினைப்பீர்கள்.

ஹிருதயமானது இரத்தத்தை வெளியிடுவதையும், சுவாஸாசயங்கள் ஊதுவதையும், இரத்தம் வேகமாய்ப் பாய்ந்து ஓடுவதையும், நரம்புகள் இழுப்பதையும், வழியடைக்கும் ஜவ்வானது திறந்து மூடிக்கொள்வதையும், மாமிசங்களும் கொழுப்புக்களும் உப்புவதையும் சுருங்குவதையும் கண்டால், நீங்கள் பயந்து "இனி நாம் இருந்த விடத்தைவிட்டு அசையக்கூடாது, ஓரேயிடத்தில் நிலையாயிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் நமது தேகத்துள் ஏதாவதொன்று உடைந்துபோம், அல்லது ஏதாவது அசையாமல் நின்றுபோம்" என எண்ணுவீர்கள். மேலும் ஒரு கடிகார யந்திரத்தை அசைப்பதனாலும் உருட்டுவதனாலும் அதற்கு என்ன குணம் உண்டாகுமோ, அதே குணந்தான் நாம் ஓடுவதனாலும் குதிப்பதனாலும் நமக்குண்டாகுமென்றும் நினைப்பீர்கள். அது அப்படியே யிருந்து நாம் நம் ஆயுள் முழுதும் ஓரிடத்திலேயே நிலையாய் நிற்கவேண்டுமென்றிருந்தால் நமக்குளவ்வளவு துக்ககரமாயிராது.

நாம் அப்படியிருப்பதற்காகப் படைக்கப்படவில்லை. எப்போதும் சுறுசுறுப்பாய் உழைத்துத் தனக்குப் பணிவிடை செய்வதற்காகவே நம்மைக்கடவுள் உண்டாக்கியிருக்கிறார். ஆதலால் மனித தேகங்களாகிய யந்திரங்கள் மனிதர்கள் செய்யக்கூடிய மற்ற யந்திரங்களைவிட மிகவும் சிறந்ததாயும் நுட்பமாயும் இருந்தாலும், அதை அலட்டுவதே அதற்கு எவ்வித நன்மையையும் உண்டாக்குகின்றது; அதனால் நமது காரியங்களுக்கு மி வும் ஒத்ததாயிருக்கின்றது.

சிறுபிள்ளைகள் குதித்து விளையாடுவதையும், பந்தயம் ஓடுவதையும், குண்டாங்கரணம் போடுவதையும், இன்னும் அநேகவிதமாய்ப் பயிற்சிசெய்வதையும் காண்கிறோம்; இவ்வகை விளையாட்டுகளிலெல்லாம் தேகம் எவ்வளவு அலண்டுபோகின்றது! ஆயினும் அதிநுட்பமான ஹிருதயம் யாதொரு கெடுதியுமில்லாமலிருப்பதுமன்றி, முன்னிலும் அதிகச் சீர்மையாய்த் தன்வழக்கப்படி அடித்துக் கொள்கின்றது. சுவாஸாசயம்முதலியமற்றஉறுப்புக்களும் அதனால் எவ்விதமான தீங்குமின்றித் தத்தம் வேலையை நன்றாய் நடத்தும். மேலும் அப்படி அலட்டினதால் அந்த யந்திரங்களெல்லாம் கொஞ்சம் வேகமாய் ஓடத்தலைப்படுமானால் அது நமக்கு நன்மை செய்யுமேயன்றிச் சிறிதும் தீங்கு செய்யாது. நாம் நமது அவயவங்களை அலட்டுவது ஹிருதய முதலிய உறுப்புகளைத் துரிதமாய் வேலைசெய்யும்படி செய்வதனாலேதான் நமக்கு அவ்வளவு நன்மையாகின்றது. அப்படிப்பட்ட தேகப் பயிற்சிகள் வெளிப்புறங்களில் செய்தால் மிகவும் உத்தமம்.

எப்போதும் உள்ளேயே யிருந்து அதிலும் அசையாமல் உட்கார்ந்திருப்பவர்கள் வியாதியால் வெகுவாய் வருந்துவார்கள். வெளிப்புறங்களில் நடந்து உலாத்துகிறவர்களுக்கு அது ஒருபோதும் உண்டாகாது.

வெளியிலேயே போகாமல் சிலர் எப்போதும் உள்ளேயே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்; அதனால் அவர்களுக்குப் பலவிதமான கெடுதிகளுண்டாகின்றன. ரக்தம் ஓடுகிற வேகம் மட்டிட்டுப் போகின்றது. அதனால் ஜீவாதாரமானவைகளும் தத்தம் வேலையில் மந்தப்படுகின்றன. ஆகாரம் ஜீரணமாகாமல் பசி மந்திக்கின்றது. இராக்காலங்களில் அமைதியாய்த் தூக்கம் வருவதில்லை. அதனால் பகலிலும் உடம்பு சுறுசுறுப்பா யிராமல் மந்தமாகவே யிருக்கும். அவர்களுக்கு அடிக்கடி குளிர்வரும். கீலுக்குக்கீல் ரக்தம் கட்டிக்கொண்டு பிடிப்பு உண்டாகும். சிலர் அதற்காக வைத்தியன் வீட்டிற்கு ஓடி மருந்து வாங்கித் தின்பார்கள். அதுவும் தேகத்திற்குப் பலவீனம் செய்யுமேயன்றி நன்மை செய்யமாட்டாது. அந்த நோயை நிவர்த்தி செய்யத்தக்க மருந்து தேகப்பயிற்சியேயன்றி வேறொன்றுமல்ல. சில எளிய ஜனங்கள் எப்போதும் வெளியிலேயே வேலை செய்துகொண்டிருக்கிறார்களே, அவர்கள் எவ்வளவு வலிமையும் சுறுசுறுப்புமுடையவர்களா யிருக்கிறார்கள். அவர்களுக்கு நோயென்பது ஒருபோதும் உண்டாகிறதில்லை.

ரக்தம் வேகமாய் ஓடுவதற்குத் தேகப்பயிற்சி எப்படிக் காரணமாகின்றது என்கிறீர்களோ?

உறவுக்கும் பகைக்கும் பொருளே துணை.

நமது தேகமும், அவயவங்களும் அசைந்தால் தேகத்திலுள்ள மாமிசங்கள் தமக்குள்ளேயிருக்கிற ரச்த நாடிகளை அமுக்குகின்றன. அதனால், தோலினால் செய்த தண்ணீர்க்குழாயை அமுக்கினால் தண்ணீர் எப்படி வேகமாய் ஓடுமோ அப்படியே ரக்தமும் வேகமாய்த் தேக முழுதும் பரவத் தலைப்படுகின்றது. ஹிரதயத்தைவிட்டு வெளியேபோன ரக்தம் மறுபடி திரும்பி ஒருபோதும் ஹிருதயம் வந்து சேராது. ஆதலால் நாம் அசைந்தாலும் நடந்தாலும் ரக்தமானது எதிர்முகமாய் ஓடும்படி ரக்தநாடிகள் நசுங்குகின்றன.

ரக்தம் வேகமாய் ஓட ஓட, மற்ற யந்திரங்களும் வேகமாய் உழைக்கத் தலைப்படுகின்றன; ஹிருதயம் தீவிரமாய் அடிக்கும். தன்னிடத்தில் ரக்தம் வந்து சேரும்போதெல்லாம், அதைச் சுத்திசெய்ய போதுமான காற்றைத் துரிதமாய்ச் சுவாஸாசயம் ஏற்றுக்கொள்ளும். சுத்தமான ரக்தம் துரிதமாய்த் தேகமெங்கும் பரவிக்கெட்டுப்போயிருக்கிறவஸ்துக்களையெல்லாம் சுத்தி செய்து, தான் பிரவேசிக்குமிடத்தையெல்லாம் துரிதமாய்ப் பலப்படுத்தும். இவ்வாறு ரக்தம் வேகமாய் ஓடுவதனால் தேகத்தின் ஒவ்வொரு அவயவத்துக்கும் பலமும் உற்சாகமும் உண்டாகின்றது. ஆகாரம் துரிதமாய் ஜீரணமாகும். குடல்கள் அன்னப்பாகினின்றும் அன்னசாரத்தை நன்றாய் வேறாகப் பிரிக்கும். நன்றாய் வேர்வையுண்டாகும். அதனால் பசிதீபனமும் நன்றாய் உண்டாகும். இதனாலேதான் சௌக்கியமாய் வீட்டில் உட்கார்ந்திருப்பவர்களைவிடப்பகற்பொழுதெல்லாம் வெளியில் உழைப்பவர்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாய் எடுக்கின்றன. ஏனெனில், அவர்களுக்குத் துரிதமாய்ச் சுவாஸமுண்டாகி வேர்வையும் அதிகமாய் உண்டாகிறபடியால் உண்ட உணவு சீக்கிரத்தில் ஜீரணமாய் விடுகின்றது.

இவ்வகையான சரீரப்பயிற்சியைவீட்டுக்குள் செய்வதைவிட, வெளிப்புறங்களில் செய்வது மிகவும் ஆரோக்கியமானது. எப்படியெனில், சுத்தமான வெளிக்காற்றிலுள்ள சுவாஸவாயு ரக்தத்தில் அதிகமாய்வந்து கலக்குமாகையால், ரக்தத்திற்கு உயிர்ப்பிக்கிற சக்தி அதிகமாயுண்டாகும்.

வருந்தியுழைப்பதும் பயிற்சி செய்வதும் தேகத்திற்குப் பலம். தேகத்தில் எந்தப் பாகம் வேலை செய்கிறதோ, அவ்விடத்தில் புதிதாய் ரக்தம்போய்ச் சேர்ந்து அதைப் பலப்படுத்துகின்றது. கருமானுடைய கைகளைப் பாருங்கள். எவ்வளவு உரப்பாயும் நீண்டுமிருக்கின்றன? தேசசஞ்சாரம் செய்கிறவர்கள் எவ்வளவு பலசாலிகளாயிருக்கிறார்கள்? எப்போதும் அசையாமல் வீட்டிலியே உட்கார்ந்திருப்பவர்கள் ஒரு அடி கூட எடுத்துவைக்கமாட்டாமல் எவ்வளவு பலவீனப்பட்டிருகிறார்கள்? ஆதலால் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் நன்றாய்ப் பிரயாசப்படும்படி செய்வதைவிடத் தேகத்திற்கு ஆரோக்கியமானது வேறொன்றுமில்லை.

நமக்கெல்லாம் நமது தேகசௌக்யத்திற்குத் தகுந்ததான நல்லவியாபாரங்கள் கிடைப்பது அரிது. நமக்கு இயற்கையான வியாபாரங்களை நன்றாய் நடத்திவரவேண்டும். அதிகமாய் வெளியில் திரிவதே தொழிலாகக் கொண்டவர்களைப்பற்றி நாம் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. ஓரிடத்திலேயே உட்கார்ந்தபடி வேலை செய்கிறவர்கள் அநேகரிருக்கிறார்களல்லவா? அவர்கள் அதிகமாய் ஒன்றும் செய்யாவிட்டாலும், ஓழிந்த வேளைகளில் கொஞ்சதூரமாவது உலாத்திவரவேண்டும். அவகாசமிருக்குமானால், இராக்காலத்தைவிடப் பகற்பொழுதில் பயிற்சி செய்வதே நல்லது. வயிறு நிம்பப் புசித்தவுடன் ஒருவரும் உடம்பை அதிகமாய் அலட்டக்கூடாது.

---

**பஞ்சரத்தினத்தைப்**பற்றி இந்து நேசன் எழுதுவது.—இவ்வினிய புத்தகம் ஸ்த்ரீ ரத்னங்கள் ஐவரின் சரித்திரத்தை அழகாக எடுத்துரைக்கின்றது. இவர்களுடைய சரித்திரங்களினால் ஸத்தியப் பிரவர்த்தி, தர்மசிந்தனை, கற்பு முதலிய அரியகுணங்கள் போதிக்கப் படுகின்றமையால், இவைகளை நமது சிறுவர்களுக்கு இளம்பிராயத்திலேயே கற்பிப்பது பெரு நன்மை விளைக்கும். சிறுவர்களுக்கு உத்ஸாகம் அதிகப்படும்பொருட்டு இந்தப் புத்தகத்தில் அழகிய உருவப்படங்கள் இந்த, சந்தர்ப்பங்களுக்குத்தக்கவாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனைத் துரைத்தனத்தாரும் பள்ளிக்கூடங்களுக் கேற்றதென்று அங்கீகரித்திருக்கிறார்கள். நல்ல காகிதத்தில் சிறப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றது. **விலை அணா 12.**

---

உறவுக்கு ஒன்பது படி, ஊருக்குப் பத்துப்படி.

# மதம்

## RELIGION

"வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லான்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியி னதித்திரள்போல் வயங்கிற் றம்மா"

—தாயுமானவர்.

"தலைபலவாய்ப் பெயர்பலவா நதிக ளெல்லாஞ்
சாகரத்தி னொருநீராந் தன்மை போலப்
பலபலவாய்ச் சொல்லுநெறி யெல்லாஞ் சொல்லப்
பட்டவொரு பொருளினையாம் பணிதல் செய்வாம்"

—அஞ்ஞவதைப்பரணி.

தள்ளாடித் தத்தளிக்கும் மனதிற்கு ஆறுதலை யளிப்பது மதமே. இப்பிரபஞ்ச வியல்பையும், அமைப்பையும், உற்பத்தியையும் சாமான்யர்களும் அறியும்படிக்கு, எளிதிற் தெரியப்படுத்துவது மதமே. துஷ்டர் சுகிப்பதும், சீரியர் துக்கிப்பதுமான விபரீத விஷயங்களைப்பற்றி நினைக்கும்பொழுது மனதில் உண்டாகும் சஞ்சலத்தையும், ஐயத்தையும், இங்கு இப்பொழுது ரமித்திருக்கும் துச்சர்கள் பின் வருந்துவார்களெனவும், அநியாயமாய் அவதிப்படும் மேலோர்கள் பின் தக்க கைமாறு பெற்றுச் சுகித்திருப்பார்களெனவும் உறுதிமொழி கூறி நிவர்த்திப்பது மதமே. கடவுளில்லை யெனவும், ஆத்மா அநித்யமெனவும், சரீரம் அழிந்தபின் ஜீவன், தன் மேன்மை குணத்தை இழந்து, நம்மைச் சுற்றி அளவளாவி வியாபித்து நிற்கும் வெளியிற் கலந்து மறைந்து போகிறதெனவும், கொலைஞன், சன்மார்க்கன், மூடன், ஞானி, இவர்கள் முடிவில் ஓரே கதியை அடைவார்களெனவும், இன்னும் இத்தகைய அநேக வீண் கோட்பாடுகளையும், வார்த்தைகளையும் உண்டுபண்ணிச் சாதித்துவரும் சிற்றறிவாளரின் வாயைக் கட்டி மெய்ப்பொருளைக் கற்பிப்பது மதமே. ஜயாபஜயம், லாப நஷ்டம், இடுக்கண் இடையூறுகள் முதலியவைகளாற் தாக்கப்பட்டு மனச்சோர்வடைந்து மூர்ச்சித்து வீழா நிற்கும் தீர்ப்பாக்கியர்கள்முன் விசுவாச மென்ற நக்ஷத்திரத்தை வைத்து, அத்துக்கங்களை நீக்குவது மதமே. நீதிநூற்களையும், நெறிகளையும், சுகாதார விஷயங்களையும் சாமான்யரும் சுலபமாய் அறியச் செய்வது மதமே. தள்ளாடும் விருத்தாப்பியர்களுக்கு ஊன்றுகோல் துணையாக நின்று உதவுவதுபோல். வியாதிகளினாலும் ஆசாபங்கங்களினாலும் உண்டாகும் வியாகூலங்களை அப்புறப்படுத்தி மனவமைதியை உண்டுபண்ணுவது மதமே. ஒருவன் தன்னாற் கூடியவரையிலும் பிறர்க்கு உதவி புரிந்துகொண்டும், வாணாளை வீணாளாகக் கழிக்காது கல்விகற்று ஞானம்பெற்றும், தர்மவிதிகளை அறிந்து அவற்றை பரவச்செய்துகொண்டும், மனத்தை வீணெண்ணம், வீணாசைகளிற் செலுத்தாது ஊக்கத்தினால் தன் நியமங்களைத் தெரிந்து, ஊக்கத்துடன் அவைகளைச் செய்துகொண்டும் இருந்துவந்தால், இகபரசுக இன்பங்களை அனுபவிக்கலாமெனக் கூறித் தைரியப்படுத்துவது மதமே.

ராஜ்யங்கள் அழியலாம்; நாகரீகம் மாறிக்கொண்டு வரலாம்; ஆனால், மதம் ஒரு பொழுதும் அழிவது மில்லை, மாறுவது மில்லை. கடவுளை மறந்து, அதர்மங்களைச் செய்துவரும் புன்மாக்களை நல்வழிப் படுத்தும்பொருட்டுச் சில புத்திமான்கள் தோன்றி நன்மை பரவச்செய்து வருவதை நாம் நன்கு அறிவோம். இத்தகையர்கள் கடவுளின் அவதாரங்களென அழைக்கப்பட்டு வருபவர்கள். காலம் இடம் மனிதர்களின் பகுத்தறிவுகளுக்கு இயைந்தவாறு அறநெறிகளைப் புகட்டிச் சீர்படுத்தி வருவதால் பற்பல மதங்கள் இருப்பதுபோலத் தோன்றுகின்றது. ஆனால் உண்மையில், மதம் ஒன்றே; அதாவது, மத விஷயங்கள், பற்பல விதங்களில் தெரிவிக்கப்பட்டபோதிலும், செம்மையாக ஆராய்ந்து பார்த்தால், ஒன்றேயாகும். மனிதன் மதப்பிராணி யாதலால், அவன் இங்கு இருந்து உலாவும் வரையிலும், மதமும் நின்று நிலவுமென்பதிற் சிறிதேனும் ஐயமில்லை. மனிதனால் உண்டுபண்ணப்பட்ட நடை, உ[illegible] பாவனைகளும், நாகரிகமும் மாறிக்கொ[illegible]டிருப்பது உண்மையே. ஆனால், அவைகளை உற்பவிக்கும் இயற்கைச் சுவபாவம் வேறடைவதில்லை. இதுபோலவே, மதத்தின் தோற்றங்கள் வெவ்வேறாகக் காணப்பட்டபோதிலும், அதிலுள்ள உண்மை வஸ்து மாறுவது மில்லை; தேய்ந்து அழிவதுமில்லை. எங்ஙனம் சுகஜீவ சிந்தனைகள், அல்[illegible]து போக இச்சைகள்

உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?

விருத்தியாவதால், நடை, உடை, பாவனைகளும், இன்ப சுகங்களும் வளர்ந்து பெருகி வருகின்றனவோ, அங்ஙனமே மனிதனுடைய ஞானமும் அறமும் நாட்குநாள் மேலோங்கி வளர்வதால், அவ்வளர்க்கைக்குத் தக்கபடி அவனுடைய மதக்கொள்கைகள், அல்லது அபிப்பிராயங்களும் மாறி வருகின்றன. அபிமானமும், அகந்தையும், அனாத்ம விஷயங்களில் சங்கற்ப விகற்பங்களும் அற்றிருப்பவரும், ஜீவகாருண்ணியம், பாசவைராக்கியம், ஈசுவரபக்தி, பிரமஞானமென்னுங் குணங்களை நிரம்பப்பெற்றவருமான ஜீவன்முத்தர், அல்லது தத்வஞானிகள் மதத்தைத் தூஷித்துத் தள்ளிவரலாம். ஆனால், அக்குணங்களை உடைத்தாயிராத சாமான்யர்களுக்கு, மதம் இன்றியமையாத் தாகும். மதம் எங்ஙனம் இன்றியமையாத தென்பதைப் பின் எழுதுவோம். இவ்வுலகிலுள்ளோ ரனைவரும் மெய்யறிவினோர்களானால், மதம் ஒருக்கால் மறையலாம். இத்தகையதை எதிர்ப்பார்ப்பது, விதையை விதைத்தவுடன் கனியைப் பெறவேண்டுமென விரும்புவதைப் போலாகும்.

மனிதனுடைய ஐம்பொறிகளுக் கெட்டாததும், அவனுடைய எண்ணம், விருப்பம், காரியங்களுக்கு எதிராகவாவது, அல்லது அலக்ஷியத்துடனாவது நடக்காததும், அறத்தை ஸ்தாபித்து, இவ்வுலகினரைச் சுகித்திருக்கச் செய்வதற்கு வேண்டிய நற்குண நன்னடத்தைகளை உடையதுமான ஒரு அல்லது பல ஜீவவஸ்துக்களின் மீதுள்ள விசுவாசமே மதத்தின் இலக்கணமாகும். மனிதன் முன்பின் பார்த்துத் தீவிரமாய் ஆலோசித்தறியும் சக்திபொருந்தியவனாதலால், தன்னைச் சுற்றிலுமிருப்பவைகள், சதாகாலமும் மாறி மாறி வருவதையும், தன் சாமான்ய அறிவினால் தெரியப்படாத இடங்களிலிருந்து மழை, மின்னல், இடி, இன்னு மிவைபோன்ற இதர விசித்திர சம்பவங்களையும் பார்த்து, இவைகளைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்குகிறான். இவ்விநோத காட்சிகளும், தன்னுடைய அந்தக்கரணமும், இவ்வுலகத்திற்கப்பால் ஒரு ஜீவ வஸ்து இருக்கிறதெனவும், அவைகள் இஜ்ஜீவ வஸ்துவின் செயற்களெனவும் அறிவிக்கின்றன. மேலும், ஞான வளப்பத்தினாலும், பரந்த பயிர்ச்சியினாலும் தன்னைச் சுற்றிச் சம்பவிப்பவைகளை உற்றுணர்ந்து நன்கு அறிகையில், அவைகள் இறுதியில் நன்மையையே பயப்பன வெனவும், வெவ்வேறாகவும், விபரீதமுமாகவும் தோன்றுபவைகள், உண்மையில், இணக்கம் பொருத்தம், அல்லது ஒழுங்கு பொருந்தியவை யெனவும், அந்நாளில் நியமிக்கப்பட்ட விதிகளினுதவியினால் ஒவ்வொன்றும், நிலை குலையாது, அதனதன் நியமங்களைச் சரியாகவும், பூரணமாகவும், ஒற்றுமையுடனும் செய்து வருகின்றனவெனவும் இவ்விணக்கம், அல்லது ஒழுங்கில்லாவிடின், மரங்களும் மலைகளும் பொடிபட்டுச் சந்திர சூரியர்கள் கதி தடுமாறி, பூமியும் வானமும் மேல் கீழாகி ஜீவப்பிராணிகள் யாவும் உள்ளங் கலங்கி மெய்நடுங்கி ஒன்றுந் தோன்றாது அலமந்து வாடி, ஞானம் அறம் என்பவைகளில்லாது, இப்பிரபஞ்சம் பாழாகி விடுமெனவும் அறிகிறான். அறிந்தபின், முற்கூறியவைகள் அல்லோலக் கல்லோல நிலையை யடையாது பாதுகாத்து வருபவன் யார்? இவ்வுலகாதிகளைப் படைத்தவன் ஒருவன் உண்டென்பதற்குப் பிரமாணமென்ன? அவன் எத்தகைய இலக்கணம் வாய்ந்தவன்? என்ன லக்ஷணங்கள் பொருந்தியவன்? என்ற வினாக்கள் அவனுடைய மனதி லுதிக்கின்றன. இவைகளைப் பற்றித் தீவிரமாய் அறியும் பொருட்டு, தத்வ ஞான புத்தகங்களை விரித்துப் பார்க்கின்றான். பார்க்கையில், பின்வரும் வாக்கியங்களைப் படிக்கின்றான்.

"அக்கடவுள் அசேதன உருவமாகக் காணப்படுபவனல்லன். இந்த ஸ்தூல வுலகம் போல் தோற்றப்படுபவ னல்லன். காண்பதற்கெல்லாம் அப்பாலாய், கேட்பதற்கெல்லாம் அதீதமாய் நிற்பது அவனுடைய உண்மை நிலை. அறிவினுள் அறிவாய், ஆன்மாவினுள் அந்தரான்மாவாய் முடிவிடம் அறியப்படாத வியாபக முடையதாய், சர்வசக்தி நிறைந்து ஆநந்தம் நிரம்பிய சாகரமாய் விளங்கும் அம்முழுமுதற் கடவுளை உற்றுணர்ந்து அறிவதற்கு அவன் வல்லபமின்றி எவரால் முடியும்?

நித்தியமாய்நின்மலமா நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீங்கா =
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரிய
சுடரா யெல்லாம் —நிறைச்]

வைத்திருந்த தாரகமா யானந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெரு
சிந்தை செய்வாம்.'' வெளியைச்]

இவைகளைப்படித்துக் கிரஹிக்க முடியாது வருந்துகிறான். இவைகள் தீர்ந்த ஞானிகளின் கொள்கைகளாதலால், இவைகளைச் சாமானியன் தெளிவாக அறிதல் சுலபமல்ல. ஆதலினாற்றான், சிற்சில கல்விமான்கள், அறிவும் அறமும் நிறைந்ததும், மானிடவுருவத்தை யொத்ததுமான ஒன்று அல்லது பல விக்கிரஹங்களைப் பிரதிஷ்டித்து, இவைகளை அவன் முன்னிருத்தி, இவைகளை அக்கடவுளின் அம்சங்களெனக் கூறி, இவைகளையே மனிதன் வழிபட்டு வந்தால் இம்மை மறுமைப் போகங்களை அனுபவிக்கலாமெனச் சாதித்து அவன் மயக்கத்தைத் தெளிவிக்கின்றனர்.

தன்னம்பிக்கை, தன்னடக்கம், நன்மை பயத்தல், பிறனில் விழையாமை, வெஃகல், புறங்கூறல், அழுக்காறின்மை, விருந்தோம்பல், இனியவை கூறல், பொறுமை, செய்ந்நன்றிமறவாமை முதலிய அறவிஷயங்களை, "தெய்வந்தொழு; சத்தியம் பேசு; தர்மஞ்செய்; சூதாடற்க; கட்குடியற்க" என, சாமான்யர்கள் எளிதில் அறிந்து, சரியாக அநுட்டித்து வரும்படி சிறு வாக்கியங்களில், ஆஞ்ஞை ரூபமாக வெளிப்படுத்தி வருகிறார்கள் மதஸ்தாபனஞ் செய்வோர்.

மனிதனே இதர ஜீவ ஜந்துக்களைவிட எவ்விதத்திலும் சிறந்தவனாகக் காணப்படுகிறான். இதரப் பிராணிகளிடமில்லாத அரிய பெரிய வஸ்து ஒன்று மனிதனிடமிருக்கின்றது. இவ்வஸ்துவினாற்றான் முன்பின் சிந்தித்துப் பார்க்கவும், சாதாரண அறிவுக்கும், பொறிகளுக்கும் புலப்படாதவைகளைப்பற்றிச் சிந்திக்கவும், தான் கண்டவை, கேட்டவை, கற்றவைகளையெல்லாம் ஒருங்குதிரட்டி அவைகளிலிருந்து உண்மையை ஆராய்ந்தறிவதற்கும் வேண்டிய சக்தியைப் பெறுகிறான். எங்ஙனம் ஜீவனின் தோற்றத்தினால் ஜடப்பொருள்கள் மேன்மை யடைகின்றதோ, அங்ஙனமே இவ்வரியதும் பெரியதுமான பரமார்த்தவஸ்து, ஜீவாத்மா, அல்லது பிரமசைதன்னிய மென்பதனால் ஜீவன் உன்னத நிலையை யடைகின்றது. ஜீவனுடைய வளர்க்கையினால் ஜடப்பொருள்களின் உருவம் முதலியனவைகள் மாறி, அவைகள் மேலடைவதைப்போல், இப்பரமார்த்த வஸ்துவின் தோற்றத்தினாலும், வளர்க்கையினாலும் ஜீவன் ஒப்புயர்வற்ற தன்மையைப்பெற்று மோக்ஷமடைகின்றது. ஜீவனில்லாது இப்பரமார்த்த வஸ்து உதிப்பதில்லை; இப்பரமார்த்த வஸ்து தோன்றிவளராது; ஜீவன் பிரகாசித்து மேம்பதவியை யடைவதுமில்லை. பிரகிருதி சாத்திரப் பயிர்ச்சியினால் நாம் இம்மைப் போகங்களைப் பெற்று அநுபவிப்பதைப்போல், தத்வஞானத்தினால் ஜீவாத்மாவை அறிந்து வீடுபேற்றை யடையலாம். துர்நடத்தைகளாலும், அலக்ஷியத்தினாலும் எங்ஙனம் உறுப்புக்கள் சக்தியற்று, உபயோகமற்றதாய் விடுகின்றனவோ, அங்ஙனமே தீய வெண்ணங்களினாலும், பேராசையினாலும் மனம் பாழடைந்து அப்பரமார்த்த வஸ்துவைப்பற்றிய எண்ணமும் சீர்கெடுகின்றது. சரீரத்திலுள்ள அவயவங்கள் கெடாதிருப்பதற்குத் தேகப் பயிற்சி முக்கியமாயிருப்பதைப்போல், அப்பரமார்த்த வஸ்துபாழாகாமலிருப்பதற்கு நற்சிந்தனை, நற்சொல், நற்செயற்களைநினைத்துக்கூறிச்செய்தல் இன்றியமையாதது. இவைகளே மனதைத் தெளிவித்து, இருதயத்தைக்சுத்திசெய்து, ஜீவனையும்பரமார்த்த வஸ்துவையும் பிரகாசிக்கச் செய்துமுக்திபெற உதவுவன. இங்ஙனஞ் செய்பவர்கள், அவர்கள் புத்தியினால் அங்கீகரிக்கப்பட்ட இன்ப சுகங்களடங்கிய சுவர்க்கமொன்றை உண்டுபண்ணி, அதற்குச்சென்று சுகித்திருப்பார்களெனவும், அவைகளுக்கு மறுதலையாக நடப்பவர்கள், வாதனைகளும் கொடூர தண்டனைகளும் நிரம்பிய நரகமென்பதொன்றைப் பிரதிட்டிப்பித்து, அங்கு சென்று வருந்துவார்களெனவுங் கூறிச் சகலரையும் சன்மார்க்கராகச் செய்ய முயல்வது மதமே.

மேலும், இயற்கை உலகை உற்றுப் பார்த்துத் தீர ஆலோசனை செய்தால் எங்ஙனம் விவேகம் மேலடைந்து ஜீவன் ரமித்திருக்கிறதோ, அங்ஙனமே இவ்வுலகப் பற்றுக்களிலிருந்து மனத்தை அகற்றி ஜகத்காரணனை கருணாகரக் கடவுளை, தினந்தோறும் குறித்த நேரங்களில் தியானித்து வந்தால், அப்பரமார்த்த வஸ்து மேலடைந்து, சிற்றறிவினால் அறியக்கூடாததை அறிந்து, பெறக்கூடாதவைகளைப் பெற்று இனித்திருக்கலாமெனக் கூறி,

மனச் சாந்தியையும், களிப்பையும் உண்டு பண்ணுவது மதமே.

மேலும், விசுவாசமே மெய்ஞ்ஞானத்தின் இலக்கணமும், இலட்சியமுமாகும். இகபர சுகங்களை அளிப்பது விசுவாசமே. வாணாளைச் சலனமில்லாது கழிப்பதற்கு விசுவாசமே இன்றியமையாதது. பெருங்காரியங்களைச் செய்வதற்குரிய தைரியத்தையும், உற்சாகத்தையும், சக்தியையுங் கொடுத்து உதவுவது விசுவாசமே. விசுவாசமில்லாது உலகம் மேலோங்கி வளர்வதில்லை. நற்பொருள்கள் தோன்றிப் பரவுவதுமில்லை. விசுவாசமென்ற அக்னியில்லாது இப்புவி பெரும் அந்தகாரம் கவிந்து விளங்கும். ஔவியம், லோபம், அருளின்மை, ஆசா பிசாசம், வெவ்வியகுணம் முதலானவைகளை ஞானசஞ்சீவி போக்கடிப்பதுபோல், ஆறாத்துயரம், பொருமிடி, போக்குவரவு முதலியவைகளால் வருந்தும் மாந்தர்களை விசுவாசமென்ற தெவிட்டாத அமுது தெளிவிக்கின்றது. வாழ்வென்னும் வீரன் விசுவாசமென்ற அசுவத்தின்மேலேறி வேண்டிய திசைகளை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறான். வீரர்கள் போர் புரிவதும், வர்த்தகர்கள் திரைகடலோடி வியாபாரஞ்செய்து பொருளீட்டுவதும், சிறுவன் சிறுமியர் பள்ளிகளுக்குச் சென்று கற்பதும் எக்காரணம்பற்றி? இறுதியில் நன்மை உண்டாகுமென்ற எண்ணத்தினால் அல்ல; விசுவாசத்தினாற்றான். புத்தி வளப்பத்தினாலும் மனோதிடத்தினாலும், விசுவாசப்பெருக்கினாலும் குருடனைப் பார்க்கச் செய்யலாம்; செவிடனைக் கேட்கச் செய்யலாம்; உன்மத்தனைத் தெளிவிக்கலாம்; தீராப் பிணிகளைப் போக்கலாம்; ஆழியை யயர்த்தலாம்; மலைகளைப் பிளக்கலாம்; சுருக்கத்தில், சகலரும் சுகித்து வாழலாம். கல்வியினால் அறிவு முதிர்கின்றது; அறிவு முதிர்ச்சியினால் மனம் உறுதிப் படுகின்றது; மனவுறுதியினால் விசுவாசம் அதிகரிக்கின்றது. இவ்வளவு மேன்மைபொருந்திய விசுவாசத்தைப் புன்மாக்கள் முன்வைத்து நற்கதியடையச்செய்வது மதத்தின் இயல்பாகும்.

மதம் கருமத்தின் மேன்மையை வற்புறுத்துவது. ஞானம் விசாரணையின் பயனை வலியுறுத்துவது. கருமமின்றி ஞானத்தை யடைதலு முடியாது. நிட்காமிய கருமம் சித்தசுத்தியைத் தந்து ஞானமடைய சாதனமாயிருப்பதால், அதை சாஸ்திரங்கள் கூறியவாறு செய்பவர் அத்துவித ஞானத்தைத் தவறாதடைவர். இதன் பொருட்டே நற்பலனை அடைவதற்கு, பேதத்தோடுகூடிய கருமத்தைப்போதித்து, அதனால், பாபத்தையும் பயனிலிச்சையையு மொழித்து, பிர்ம தத்வத்தை உணர்த்தி, அது கைவல்லியமாகும் வண்ணஞ் சகுணோபாசனையைக் கூறி அப்பேதத்தையொழிக்க நிற்குணோபாசனையைப் பின்காட்டி, அதற்குமேல் அத்துவிதத்தைக் கூறி, இதுவே மேம்பட்டதெனவும், மற்றவை யனைத்துஞ் சோபானமெனவும் வேதம் விளக்கியது.

உயிராகிய பூமியில் கல்வி விதையை விதைத்து, முயற்சி, விசுவாசமென்ற துளிகளால் நிரம்பிய நீரைப் பாய்ச்சி, உண்மை, உழைப்பு, லோகோபகாரம், தன்னடக்கம் என்ற இளந்தளிர்களையுடைய ஓர் செடி மேல் வளர்ந்து, மதம் என்ற அரும்பு தோன்றி, தத்வ ஞானம் என்ற மலர் புஷ்பித்துக் கடைசியில் மோக்ஷம் என்ற இனிய பழம் பழுக்கும். அதன் இனியதேனையுண்டு களிக்கும் பெரியார் அன்றோ மதத்திற்கு மூலாதாரமாக விளங்கி அருள்புரிபவர்! அவரது வழியைக் கடைப்பிடிப்பதே மாந்தரது முதற்றொழிலென்பது தவறாகாதென்பதை யார் தடுக்க வல்லார்?

---

## மாமரம் பயிர்செய்தல்

### MANGO CULTIVATION

நாம் மாமரத்தை, இமயமலைச் சாரலைத் தவிர இந்தியாவில் எவ்விடத்திலும் காணலாம். ஆனால் மரங்கள் அதிகமாயிருந்தாலுங்கூட நல்ல பழங்கள் அகப்படுவது கஷ்டமாயிருக்கின்றது. அதற்குக் காரணம் என்னவென்றால், மாமரத்தைப் பயிர்செய்யும் முறை ஜனங்களுக்குத் தெரியாததால்தான் போலும். மேலும், ஆரம்பத்தில் நாம் கொஞ்சம் சிரத்தை

---

உற்றாருக்கு ஒன்றும் கொடான், நமனுக்கு நாலும் கொடுப்பான்.

யெடுத்துக்கொண்டு நல்ல ஜாதி மாமரங்களை வைத்து விருத்திசெய்தால், பின்னால் நாம் அதிக லாபம் அடையலாம்.

நல்ல மணமுள்ளதும், ருசியுள்ளதுமான பழங்களிலிருந்து கொட்டைகளைச் சேதப்படாமல் எடுத்து, சிறு மண்தொட்டிகளில் நல்ல உரமுள்ள மண் அல்லது களிமண் போட்டு, அவைகளில் நடவேண்டும். அக்கொட்டைகளில் பூச்சி புழு முதலானவை இருத்தலாகாது. அக்கொட்டைகளுக்குத் தினந்தோறும் ஜலம் விடவேண்டும். சிறு செடிகள் முளைத்தபின்பு அவைகள் அதிக மழையினாலாவது காற்றினாலாவது கெட்டுப்போகாமல் பாதுகாத்தல் அவசியம்.

மேலும், இச்செடிகளைவைத்து விருத்தி செய்வதற்கான இடம் அதிக மணற்பாங்குள்ளதாயிருத்தல் கூடாது. ஏனென்றால் மணல் பூமியும் சரள்பூமியும் தண்ணீர் கொள்ளாதாகையால் மாமரம் இவ்விடங்களில் நன்றாய் வளராது. அதற்கு ஈரம் அதிகம் உள்ள தரையே தேவை. மண்ணும், சுண்ணாம்பும், கொஞ்சம் மணலும் கலந்த பூமியானது மாமரத்தின் ஆழமான வேர்களையும், அவ்வளவு பெரிய மரத்தையும் தாங்கச் சக்தியுள்ளது. ஆகையால் இத்தரையிலேயே மாமரம் நன்றாய் வளரும். மேற்சொன்ன பூமி யகப்படாவிடின், மணலையோ அல்லது களிமண்ணையோ தரையோடு கலந்து, நல்ல பூமியாக உபயோகப்படுத்தலாம். அத்தரையானது பூமி மட்டத்திற்குச் சற்று உயர்ந்தே யிருக்கவேண்டும். அவ்விடத்திற்குக் கிழக்கேயும் தெற்கேயும் யாதொரு அடைப்பும் இருக்கக்கூடாது. அவ்வாறிருப்பின் கீழ்காற்றும் தென்றலும் மரத்தில்படாது. மேலும், பெரிய ஊர்கட்கு அருகாமையில் மாந்தோப்புகள் உண்டாக்குவது பெரும் பேதமையே. ஏனெனில், பட்டணங்களிலுள்ள தூசி இலைகளின்மேல் படிவதால், அம்மரத்திற்கு வேண்டிய காற்றையும் சூரிய வெளிச்சத்தையும் உட்கொள்ள அவ்விலைகளுக்குச் சக்தியில்லாமல் போகின்றது. ஆகையால் மரங்கள் நல்ல வளர்ச்சியில்லாமல் க்ஷீணமடைகின்றன. நிலத்தில் உரமில்லாவிடின், எரு, குப்பை, எலும்புத்தூள் முதலியவைகளை உபயோகப்படுத்தலாம்.

இவ்வாறு பூமியைச் சீர்திருத்திய பிறகு, மாங்கன்றுகளை நடுமுன், நிலத்தை உழவேண்டும். பிறகு, மூன்றடி நீளம், மூன்றடி அகலம், மூன்றடி ஆழமான குழிகளை சுமார் நூறடிக்கு ஒன்றாக வெட்டி இரண்டு மாதம் வரையில் அவைகளை மூடாமல் வைத்திருக்கவேண்டும். மரங்களை அதிக நெருக்கமாக நட்டால், மழை காலத்தில் பூச்சிகள் உண்டாவதுடன், அவை அதிக உயரமாய் வளர்ந்து கிளைகள் இல்லாமல் போகின்றன. குழிகளிலிருந்து வெளியே எடுத்துப்போட்ட மண்ணுடன் ஒரு கூடை எருக்குப்பை, கொஞ்சம் எலும்புத்தூள் இவைகளைக் கலந்து, குழிகளை அம்மண்ணால் நிரப்பி, செடிகள் நடுவதற்காகச் சிறு துவாரங்கள் செய்யவும். மழைகாலத்திலாவது அல்லது நன்றாய்த் தண்ணீர் சிலநாட்களாகப் பாய்ச்சின பிறகாவது, கன்றுகளைத் துவாரங்களில் நடவேண்டும். தொட்டிகளிலிருக்கும் கன்றுகளைச் சாக்கிரதையாக எடுக்க வேண்டும். தொட்டிகளை உடைத்து, கன்றின் வேரைச் சுற்றியிருக்கும் மண், சேதப்படாமல் எடுத்துப் புதைக்கவும். கன்று காற்றினால் அடிபட்டுக் கீழே விழாமலிருப்பதற்காக, பலமான குச்சி யொன்றை நேராக நட்டு, அதோடு கன்றைக் கட்டுவது நல்லது. தினந்தோறும் தண்ணீர் விடுவதை நிறுத்தக் கூடாது. ஆனால், நல்லமழை பெய்த நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குத் தண்ணீர் விடவேண்டாம்.

ஒவ்வொரு செடியைச் சுற்றியும் பாத்திகட்டிக் கோடைகாலத்தில் செடியைச்சுற்றியுள்ள மண்பிளவுபடாமலும் ஈரம் உலராமலும் இருப்பதற்காகப் பாத்தியில்சுமார்இரண்டு அங்குல கனத்திற்குக் காய்ந்த இலைகளை போட்டு வைக்கலாம். இவ்வாறு செய்துகொண்டும், தண்ணீர் சரியாய் ஊற்றிக்கொண்டும் வந்தால், சுமார் இரண்டு அல்லது மூன்று வருஷங்களில் மரம் பெரிதாகிப் பூக்கும். இப்பூக்களை நாம் பிடுங்காமல் விட்டுவிட்டால் அவை காயாகிப் பிறகு பழுத்துவிடும். ஆனால் அப்பழங்கள் பெரியனவாயும்ருசியுள்ளனவாயும் இருக்க மாட்டா; மரமும் பிறகு நல்ல பழங்களைச் கொடுக்காது. ஆகையால் முதல் வருஷப் பூக்களைப் பிடுங்குவதே மேல்; இன்னும் இரண்டு

உனக்கும் பேபே உன் அப்பனுக்கும் பேபே.

வருஷங்களுக்கு அப்படியே செய்தால் பிறகு பெரும் லாபம் அடையலாம்.

ஐந்தாவது வருஷம் வந்ததும், மரம் காய்க்குமாதலால் அதற்கு நல்லுணவு தேவை. அதற்கு, மரத்தின்கிளைகள் சிலவற்றையாவது, சிறு வேர்களையாவது வெட்டவும். ஆனால் மாமரத்தின் வேர்களை வெட்டுவதுதான் சிலாக்கியம். அதற்கு மரத்தைச் சுற்றி ஆழமாய்த் தோண்டி, அடிவேர்களிலிருந்து உண்டாயிருக்கும் சிறு சிம்புவேர்களை மாத்திரம் வெட்டி, எலும்புத்தூள் ஐந்தாறு ராத்தலும், எருவும், குப்பையும், கொஞ்சம் உப்பையும் அந்த மண்ணுடன் நன்றாய்க் கலந்து தோண்டியகுழியை அதால் மூடிவிடவேண்டும். மரம் பெரிதாக வளர்ந்து விட்டதே என்று நாம் தண்ணீர் விடாமல் இருக்கக்கூடாது அப்பொழுதுதான் மரத்திற்கு வேண்டிய தண்ணீர் விட வேண்டும். அப்படிச் செய்தால்தான், அடியில் போடப்பட்ட உரம் கரைந்து ஆகாரமாய் வேர்களால் உட்கொள்ளப்படுகிறது. உப்புப் போடுவதால் மரத்தை அழிக்கும் புழு பூச்சிகள் அழிந்துபோகும்.

சிலநாட்களுக்குப் பிறகு மரம் பூத்துக் காய்கள் உண்டாகின்றன. காய்களைப் பறிக்காவிடில் அவை பழுக்கும். ஆனால் சிலர் காய்களைப் பறித்துப் பழுக்கவிடுகின்றனர். அப்படிப் பழுத்த பழங்கள் ருசியாயிருப்பதில்லை. ஆகையால் மரத்திலேயே பழுக்கவேண்டும். காய்கள் பழுக்கும்பொழுதுநாம் முக்கியமாய்க்கவனிக்க வேண்டியது என்னவென்றால், மரத்திற்கு வேண்டிய தண்ணீர் ஊற்றப்படுகிறதா என்பதே. தண்ணீரில்லாவிட்டால் பழங்கள் காற்றினாலும் வெயிலினாலும் கெட்டு, சரியாகப் பழுக்காமல் கீழே விழுந்துவிடுகின்றன. ஆனால் புரட்டாசியிலிருந்து மார்கழி மாதம் வரைக்கும், அதாவது ஸெப்டம்பர் மாதத்திலிருந்து டிசம்பர் வரைக்கும் மரத்திற்குத் தண்ணீர்விடுவதைநாம்நிறுத்திவிடவேண்டும். தண்ணீர் விடுவதனால் கெடுதியில்லையென்றாலும், அது வீண் சிரமமே. ஏனெனில் அம்மாதங்களில், போஷணம்மரத்திக்குவேண்டிய அளவுக்குமேல் இருப்பதாலும், காய்கள் புதிதாக உண்டாகாமல் இலைகளே உண்டாகின்றனவாதலாலும், தண்ணீர்விட்டும் ஜாஸ்திக் காய்கள் இருப்பதில்லை, இலைகளே அதிகமாகின்றன. ஆதலின். நாம் வீண் சிரமம் எடுத்துக்கொள்வானேன்?

மேலே சொல்லியவாறு, ஐந்துவருஷ காலம் பொறுத்து, பிறகுசற்றுக்கஷ்டப்பட்டுப் பழங்கள் உண்டாக்கினால் ஏராளமான லாபம் அடையலாமென்பதற்குத் தடையில்லை. பழங்களோ, அதிக ருசியும் மணமும் கொண்டிருக்கும்.

ஆனால், இவ்வாறு பயிர்செய்தும் சிலர் நஷ்டமடைகின்றனர். மாமரங்களுக்கு ஒரு விதமான பூச்சிகள் வருவதுண்டு. அப்பூச்சிகளைத் தேன்பூச்சியென்று சொல்லுவார்கள். அப்பூச்சிகள், சொந்தக்காரனுக்கு வெகு நஷ்டம் விளைவிக்கின்றன. ஆனால் இரண்டு வருஷங்கட்கு முன்னால், சேலம், சித்தூர் ஜில்லாக்களில் சில பரீக்ஷைகள்நடந்தன. மண்எண்ணெய் சோப்பும் (Crude oil emulsion), மீன் எண்ணெய் சோப்பும் (Fish oil Soap,) தேன்பூச்சிகளின்மேல் பிரயோகப்படுத்தப்பட்டன. அதனால் சிறு பூச்சிகள் எல்லாம் உடனேயும், பெரிய பூச்சிகள் சற்றுத் தாமதித்தும் இறக்க நேர்ந்தது. இவ்விரண்டு மருந்துகளில், மீன் எண்ணெய் சோப்பே, விலை சகாயமானதாயும் நல்ல மருந்தாயும் இருக்கின்றது. ஆகையால் மாந்தோப்பு வைத்துப் பயிராக்குகிறவர்கள் தேன்பூச்சிகளைக் கொல்லாமலே மேற்சொல்லிய மருந்தை உபயோகப்படுத்தலாம். அதை உபயோகப்படுத்தும் முறையைப்பற்றி இங்கு சொல்ல இடம் போதாததால், பயிர் செய்பவர்கள் பிங்கள வருஷத்திய சென்னை விவசாய பஞ்சாங்கத்தை' (Agricultuaral Calendar 1917-18) ப்பார்த்து நன்றாய்த் தெரிந்து கொள்ளலாம்.

ஐரோப்பிய மஹாயுத்தம்

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

ஐரோப்பிய மஹா யுத்தத்திற்குக் காரணங்கள், ஐரோப்பிய தேச சரித்திர ஸம்பந்தமான பல விஷயங்கள், இந்த யுத்தத்தில் ஸம்பந்தப்பட்ட மன்னர்கள், ஸேனாதிபதிகள், பயங்கரமான யுத்தாயுதங்கள் முதலியவைகளின் விவரங்கள், சித்திரப் படங்களுடன் தெளிவாயும் கதைப்போக்காயும் ஸாமான்ய ஜனங்கள்கூட எளிதில் படித்தறிந்து கொள்ளும்படி எழுதப்பெற்றிருக்கிறது.

256-பக்கங்கள் : : 58-ஆப்டோன் படங்கள்.

போதினிச் சந்தாதாரர்க்கு மாத்திரம் ரூ. 1

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர்.

உன் சொல்லிலே உப்பும் இல்லை புளியும் இல்லை.

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

### நன்னெறி : IV.

(156 பக்கத் தொடர்ச்சி.)

திரும்பித் தன் புதுக்குடிசைக்குப் போய், கையில் மீதியிருந்ததைப்புசித்து அன்று பொழுதைக் கழித்தான். மறுநாட்காலை ஆகாரத்திற்கு ஒன்று மில்லாததால், ஏதாவது காய் கனி கிழங்குகள் சம்பாதித்து வரலாம் என்றெண்ணிக் குடிசையைவிட்டு வெளியேறினான். பத்து அடி போகு முன், ஒரு மரக்கிளையில் ஏதோவொரு துணிமூட்டை தொங்குவதைக் கண்டு, அத்யாச்சர்யமடைந்து, அதை யெடுத்து அவிழ்த்துச் சோதிக்க, அதில் ஒரு மனிதனுக்கு ஒரு வாரம் போஜநத்திற்கு வேண்டிய 'ஸம்பாரம்' முழுவதும் ஒழுங்காக முடியப்பட்டிருப்பதை அறிந்தான். "என்னே கடவுளின் க்ருபையிருந்தவாறு!" என்று கடவுளின் பெருமையை வியந்து பெரிதுங் கொண்டாடி, அம்மூட்டையைக் கொண்டுபோய், உணவாக்கித் தின்று வந்தான். ஒரு வாரங்கழித்து அம்மூட்டை காலியானதும், 'கனிவர்க்கங்கள் கொஞ்சம் சேகரிக்கலாம்' என்ற நோக்கத்தோடு வெளியேற, முன்மாதிரி அதே மரக்கிளையில் அதேயளவுள்ள மூட்டையொன்று கட்டப்பட் டிருந்தது. பரமாச்சர்ய மடைந்து அதையுங்கொண்டுபோய் ஒருவாரங்கழித்தான். இப்படியே, பிரதி வாரமும், ஒரு மூட்டை அகப்பட நிர்விசாரமாகக் காலங்கழித்துவந்தான். அவனுக்கிருந்த பயமெல்லாம் வழிப்பறியோனிடந்தான். "இறப்பது ஒன்றும் ப்ரமாதமில்லை. என்றாலும், நமது ப்ராயச்சித்தமுடிந்து பாபமொழிந்த பின்பு இறந்தாலல்லவா நமக்கு நற்கதி கிடைக்கும்? அதற்குள் நம்மைக் கொன்றுவிட்டால் என்செய்வது?" என்ற ஒரு பெருங்கவலை இவனுக்குள்ளே இருந்துகொண் டிருந்தது.

இப்படியே பத்து வருஷங்கள் கழிந்தன. மூன்று கட்டைகளில் ஒன்று துளிர்த்ததென்று சொன்னேமல்லவா? மற்றைய விரண்டும் அப்படியேதானிருந்தன; துளிர்ப்பதாகக் காணோம். ஒரு நாட்காலை, கட்டைகளுக்குத் தண்ணீர் வார்த்துவிட்டுச் சிரமபரிகாரமாக உட்கார்ந்து மனம்போன கதியிலேயே யோசிக்க லாயினன். "என் மனம் இன்னும் பக்குவமடையவில்லை யல்லவா? 'எல்லாமவன் செயல்.' ப்ராயச்சித்தமோ எதுவோ, அவன் ஆஞ்ஞைப்படி நடக்குமே யொழிய, நம்மால் என்ன இருக்கிறது? அப்படியிருக்க, 'நாமிறந்து விடுவோமோ' என்ற பயம் நமக்கெதற்கு? ஒருகால், நாம் இறப்பதேதான் பாபங்களுக்குப் பரிகாரமோ என்னவோ? கடவுளின் சித்தத்தை யறிந்ததார்? ஆகவே கடவுளைத் தவிர வேறொருவரிடமும் நாம் பயப்படுவது பிசகு. இவ்வழிப்பறிக்காரனிடம் நாம் நடுங்குவது மடமை" என்று ஸித்தாந்தப்படுத்திக்கொண்டேயிருக்க நான்கடி தூரத்தில் அக்கொள்ளைக்காரன் வருவதைக் கண்டான். ஆனால் அவன் மட்டும் தனியாய் வரவில்லை. பின்னால் இளம் பிராயத்தனான ஒரு மனிதனைப் பின்கட்டாகக் கட்டிக் குதிரையின் பின்பாகத்தில் பிணைத்திருப்பதையும், அவ்வாலிபன் 'குய்யோ' 'முறையோ' என்றலறி "ப்ரமாணமாகச் சொல்லுகிறேன். எனக்குத் தெரியாது. தெரிந்தால் சொல்லி உயிரைக் காப்பாற்றிக் கொள்ளேனா? தான் சாக யாராவது மருந்துண்ணுவானா?" என்று புலம்புவதையும், "சீ பணத்தாசை பிடித்த லோபி; வாயை மூடு. மயிலே மயிலே இறகுபோடென்றால் போடுமா? காலால் மிதித்துப் பிடுங்கினால்தானே யுண்டு. வா, வா, உனக்குச் சொல்லுகிறேன் வழி" என்று திருடனளிக்கும் பயங்கரமான பதிலையுங் கவனித்தான். சரேலென்று எழுந்து திருடன் முன் வந்து நின்றுகொண்டு, "இது யார்? இவனை நீயேன் இப்படி ஹிம்ஸிக்கிறாய்?" எனக் கேட்டான்.

"அடுத்தவூர், கோபால்செட்டி மகன். இவன் பிதா நகைப்பெட்டி ஒளித்துவைத்திருக்கும் இடத்தைச் சொன்னால், விட்டுவிடுகிறேன், என்று நியாயமாகச் சொன்னால், 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று சாதிக்கிறான். இவனைக் கொண்டுபோய், மரத்தில் கட்டி, சுண்ணக் குறியிட்டு, வெள்ளுரியா யுரித்தால் அப்பொழுது சொல்வானல்லவா?"

"அது தர்ம மல்ல அப்பா, அநியாயமாக நீ ஏன் இவனை—"

"ஏ ஸந்யாசி! உனக்கென்ன கேடு காலம்? வழியைவிட்டு விலகு," என்று குதிரையை நடத்தினன் அவ்வழிப்பறிக்காரன். சற்றும் மனங்கலங்காது அத்திருடனது குதிரையின் கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்து நிறுத்திக்கொண்டு, "நான் உன்னை விடப்போகிறதில்லை. இந்த அக்ரமத்தைச் செய்வது தவிர்த்து இவ்வாலிபனைக் கட்டவிழ்த்து விடுவதாக நீ வாக்களித்தாலொழிய, நான் குதிரையின் கடிவாளத்தை விடுவதில்லை" என்று ஸந்யசி தீர்மானமாக மொழிந்தனன்.

"சரி, உனக்கு ஆயுட் ப்ரமாணம் முடிந்து விட்டது. நீ யென்ன செய்வாய்? இன்னமொருமுறை சொல்லுகிறேன். வழியை விட்டு விலகு" என்று கையிற் பிடித்திருந்த பிச்சுவாவை ஓங்கினன்.

அதற்குச் சிறுதுமஞ்சாது அந்த ஸந்யாசி, "அடே துஷ்டா! ஒருவன் உயிரை எடுக்கவும் வைக்கவும் நீ யார்? எதுவும் ஈசுவர ஸம்மதமில்லாமல் நடவாது என்றறியாது, நீ என்னைக் கொல்வேனென்றாய். ஆத்மா அழிவில்லாதது. இந்தப் பாழும் சடலத்தை வேண்டுமென்றால் உன்னாலொழிக்கமுடியும்; அதுவும் கடவுள் சம்மதமிருந்தால்தான் ஆகும். ஆனால் நான் உன் பயமுறுத்தலுக்குப் பின்னடைவேனென்று எண்ணாதே" என்று பின்னும் போராடினன். ஒரு நிமிஷம் திருடன் முகத்தில் அகங்காரமும், கோபமும் ஜ்வலித்தன. ஸந்யாசியைக் குத்தி வீழ்த்துவதற்காக, வலது கையிலிருந்த ஆயுதத்தை யோங்கினன். ஆனால் மறு நிமிஷம் ஓங்கின கை தாழ்ந்தது. அந்த ஸமயம் அவன் மனதில் என்ன தோன்றிய தென்பதையும், திடீரென்று தான் செய்ய நினைத்த கொடுஞ்செயலைச் செய்யாதொழியும்படி அவன் மனம் மாறினதையும், அவனைப் படைத்த கடவுளையன்றி மற்று யாரே அறியவல்லார்? கையைத் தாழ்த்தியதும், சற்றுக் கடுகடுப்பான முகத்தோடு ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டே குதிரையினின்று மிழிந்து, அதிற் பிணிக்கப்பட்டிருந்த வாலிபனைக் கட்டவிழ்த்து விட்டு, வேறு ஒரு வார்த்தையும் பேசாது, குனிந்த தலையோடு அவ்விடம் விட்டகன்றனன். வாலிபனும்ஸந்யாசியின் காலில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து "என் உயிர்ப் பிச்சை யளித்த புண்யனே! நீயே எங்கள் குல தெய்வம். தயவு செய்து அடுத்த நகரத்திலிருக்கும் எங்கள் வீட்டிற்கெழுந்தருளி, என் பெற்றோருடைய மனமார்ந்த வந்தனங்களையும் பெற்றுச் செல்ல வேண்டும்" என்று பிரார்த்தித்தான். ஸந்யாசியும் "அப்பா, நான் புகழுக் குரியவனேயல்ல; என்னாலென்ன நடந்தது? அத்திருடன் மனதிற் புகுந்து அவனுக்கு நல்லெண்ணத்தை யூட்டிய கடவுளன்றோ ஸ்தோத்திரத்துக்குப் பாத்ரம். நான் காட்டிலேயே வஸிப்பதென்றும், நகரங்களுட் செல்லுவதில்லையென்று முள்ள ஸங்கல்பத்தோடு இங்கு வந்திருக்கிறேனாகையால், உன்வார்த்தையின்படி உங்கள் க்ருஹத்துக்கு வரவியலாது. ஆகவே, உன்னை உன் பெற்றோர்கள் தேடுமுன், வீடு போய்ச் சேர்" என்றுத்தரவளிக்க அவ்வாலிபனும் வீடு சென்றனன்.

இது நடந்த மறுநாட்காலை வழக்கம்போல் துளிர்த்திருக்கும் ஒருசெடிக்கும், துளிர்க்காதவிருகட்டைகட்கும் ஜலம் வார்க்கப் போகும்போது அவன் மனம் திடுக்கிட்டது. என்ன விசேஷம்? மற்றொன்றுமில்லை; இரண்டாவது கட்டை துளிர்விட்டிருந்ததுதான். பரமானந்த பரிதனாய், ஸந்தோஷமும் திருப்தியும் கண்களில் ஜ்வலித்தன. கைகளை யஞ்சலி செய்து, தன் பாபம் நீங்கி நல்லகாலம் பிறக்கும்படி செய்த கடவுளின் கருணைத் திறத்தைக் கொண்டாடினன். துக்கம் நேர்ந்தவிடத்து "ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா!" என்று துதிப்பது எல்லோருக்கும் வழக்கமே; ஸுலபமுந்தான். ஸந்தோஷமுற்ற சமயங்களில் மனதைக் கடவுள்பால் செலுத்துவதன்றோ அருமை? அதுவன்றோ நிஜமான பக்தியின் அடையாளம்!

கார்யங்கள் முன் போலவே நடந்துவந்தன. பிறந்தோரிறப்பதும், இறந்தோர் பிறப்பதுமாக உலகமியங்கி வந்தது. ஸூர்ய சந்திர நக்ஷத்ராதிகள் தங்கள் தங்கள் கதியில் ஒரு சிறிதும் மாறுபாடின்றிக் கடவுளின் ஆஞ்ஞையைச் செய்துகொண்டிருந்தன. நமது கதாநாயகனும் கவலையொன்றுமின்றியிருந்துவந்தான். எதைப் பற்றியுங் கவலையே யில்லாமல் எல்லாமீசன் செயல் என்று கேவலம் வாசா ஞானத்தோடு நில்லாமல், நிஜமாகவே நம்பி நடந்து வந்தானாகையால், மனது சஞ்சலமே யில்லாமல், ஸதா

சாந்தியே குடிகொண் டிருந்தது. ஆசையும் பொறாமையுங் கவலையும் மனதிற் குடிகொண்டிருக்கும் வரையிற்றானே வீண் கஷ்டமெல்லாம்? இப்படியே பத்துவருஷங்கள்சென்றன.

ஒரு நாட்காலை யுண்டியருந்தி மரநிழலிலுட்கார்ந்து சிருஷ்டியின் ப்ரபாவத்தை வியந்து கொண்டும், அதற்கெல்லாம் ஆதிகாரணமாகிய அரும் பெருங்கடவுளை வழிபடாமலே யொருவன் எப்படி வாழக் கூடுமென்று யோசித்துக்கொண்டு மிருந்தான். "ஆகா, என்ன கருணை கடவுளுக்கு. தன் சிருஷ்டியிலுயர்ந்த மனிதர்கள் ஸௌகர்யமாக வாழவேண்டி எவ்வளவு விசித்திரமான ஏற்பாடுகள் செய்து முடித்திருக்கிறார். கடவுள் ஸம்மதப்படி, வீண் சச்சரவில்லாமலும், காமக்குரோதாதி குரும்புகளை யகற்றியுமட்டும் வாழ்வானேல், மனிதனிலும் பாக்யசாலி யார்? இதை யறியாமலல்லவா மதிமோசம்போய்ப் பெருங்கேடுற்று மடிகிறது மனிதவர்க்கம்?" என்று இப்படிப் போய்க்கொண்டிருந்த மனம் திடீரென்று வேறுகதியில் திரும்பியது. "கூடியமட்டில் ஆசைகளும், கவலையுமின்றி வாழ்கிறோமென்பது மெய்யே. ஆனால் என்னால் பிறருக்கு என்ன உதவி கிடைக்கிறது? நம் ஸகோதரரான ஜீவர்களுக்கு நம்மாலான வோர்வித கைங்கர்யமும் புரியாமல் வாழ்வது சிறந்த வாழ்வாகுமா? கேவலம் ஸ்வய நலங் கருதிய புல்லிய மார்க்கமாக வல்லவோ ஆய்விடும்? ஆகவே, இப்படிக் காலங்கழிப்பதை விட்டு, ஜநநிபிடிதமான நகரங்களிற் சென்று ஜநங்களுக்கு ஹிதோபதேசஞ்செய்து, கூடியவரை, பாசபந்தங்களினின்றும் தங்களை விடுவித்துக்கொள்ளநன்மார்க்கத்தை யவர்களுக்கு உபதேசிப்பது பரோபகாரமாகு மல்லவா? ஆகவே அதுவே ஸரி. சீக்ரமே நாம் புறப்படவேண்டும்"என்ற முடிவிற்கு வந்தான். வந்ததுதான் தாமஸம், அச்வாரூடனாய் வரும் திருடன் கண்ணெதிர்ப்பட்டான். அவன் ஏதோ பலமான யோசனையிலாழ்ந்து தன்னையும் மறந்து, குதிரையின் கடிவாளத்தை நழுவவிட்டுக் குதிரை சென்றபடி விட்டுக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும், "நாம் எவ்வளவு சொன்னாலும் அவன்மனம் நல்வழியில் திரும்பப் போவதில்லை. வீண் கண்டக்ஷேபந்தான்"என்று முதலில் எண்ணினான் நம் கதாநாயகனாகிய ஸந்யாசி. ஆயினும் அடுத்த நிமிஷம் அவனுக்கு இயற்கையாயுள்ள கருணை மேலிட்டது. "ஏதோ நம்மாலானதைச் செய்து பார்க்கலாம். அநியாயமாய் ஒருவன் பாபக் குழியில் விழுவதைப் பார்த்தும் சும்மாவிருப்பது பாபஹேது" என்று அவன் திருடனிடம் போனான். போய் "அப்பா, நான்சொல்வதைநன்றாய்க் கவனி. பிறகு உன்னிஷ்டம்போல நட. மனிதனுக்கு ஸ்வபாவமாகவே மிருகப்ராயமான குணங்களேதா னமைந்திருக்கின்றன. அவைகளுக்கு இடங்கொடுத்தால், மனிதன் அதோகதியடையவேண்டியதுதான். மிருகத்தினின்றும் மனித வர்க்கத்தை விசேஷித்துப் பிரிக்கும், பகுத்தறிவைக்கொண்டு, கீழ்மைத் தன்மை பொருந்திய குணங்களை யெல்லாமடக்கி, மேற்குணங்களே ப்ரகாசிக்க விளங்குபவனே மனிதன் என்னும் பெயருக்கு உரித்தானவன். அவனே கடவுளின் கட்டளையை நிறைவேற்றுபவன். மற்றப்படி துன்மார்க்கத்தையே அவலம்பிப்பவர்களெல்லாம் பூபாரந்தான். கடவுளை மட்டும் திடமாய் நம்பி, துர் எண்ணங்கள் மனதிற் புகாமலிருக்க முயல்வோமாகில், முதலில் சிறிது வருத்தமா யிருப்பினும், முடிவில் கார்யஸித்திபெறுவது நிச்சயம்! கடவுளின் க்ருபைக்குஎல்லையில்லையல்லவா? உன்னுடையஆத்மாவோ நித்யமான வஸ்து;பாபபுண்ய ஸம்பந்தமில்லாதது; நல்வழியிலேயே உன்னைச்செலுத்தப்பார்க்கும். அதையும் நிக்ரஹித்து ஏன் வீணாக, கண்ணைத் திறந்துகொண்டே கிணற்றில் விழுபவனைப்போல், நரகவாதனையைத் தேடிக்கொள்ளுகிறாய்?" என்றான்.

இவ்வளவையும் பொறுமையுடன் கேட்ட திருடன் பதிலொன்று மளியாது, ஒரு கையால் எதிரில் நின்ற அச்சந்யாசியை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தன் வழியே போக எத்தனித்தான். ஆனால் ஸந்யாசிக்கு வந்த துக்கத்துக்கு அளவில்லை. "ஐயோ! எவ்வளவு எடுத்துச்சொல்லியுங் கேளாது கெட்ட வழியிலேயே உழல்கிறதே யொரு ஜீவன்" என்று அன்பினால் கனிந்துருகினான். இவ்வாறு நல்ல சிந்தையே யில்லாமல் கடவுள் ஒருவனை ஏன் சோதிக்கவேண்டும் என்று அனலிலிட்ட மெழுகெனத் தபித்தான். பரிசுத்தமான மனது பரிதாபத்தாலும், ஸகோதர வாஞ்சையாலும், நிறைந்தது. கண்ணீராறாகப் பெருக, தலைமேல்

உயரப் பறந்தாலும்ஊர்க்குருவி கருடன் ஆகுமா?

கூப்பிய கரத்தோடு, பக்தியால் நெக்குவிட்டுருகும் மனத்தோடும், "ஹே, தயாநிதே, 'மணி மந்த்ர மாதியால் வேண்டு ஸித்திகள் உலக மார்க்கத்தில் வைக்கவில்லையோ, பாழான வென்மனங் குவிய வொரு தந்திரம் பண்ணுவதுனக்கருமையோ' என்று கூறிய அருள் வாக்கையெடுத்து அண்டாண்டங்களையும், சராசரங்க ளனைத்தையும், லீலாவினோதமாகப் படைத்து, ரக்ஷித்து, ஸம்ஹரிக்கும், ஸர்வ வல்லமையுள்ள உனக்கு, இப்பாபியான திருடன் நல்வழிப்படும்படி திருவுள மிரங்கவில்லையோ?" என்று மிகுந்த ஆராமையோடு பிரார்த்தித்தான்.

இதையும் செவியுற்று வந்த திருடன் திடீரென அச்வத்தை விட்டிழிந்து ஸங்யாசியின் பாதங்களில் அடியற்ற பனைபோல் வீழ்ந்து, அவன் பாதத் தூளியைச் சிரமேற்கொண்டு, "ஹேபுண்யனே, உன் பக்திக்கும், ஆராமைக்கும், அன்பிற்கும் இளகாத மனமுமிருக்க முடியுமோ? எவ்வளவோ வருஷங்களாக நானுமிதே தொழிலையே பின்பற்றி யிருந்தும், என் மனதிற் சிறிதேனும் பச்சாத்தாபமென்பதுண்டாகவேயில்லை. நீயும் சுமார் 20 வருஷங்களுக்கு மேலாகவே, எனக்கு ஹிதோபதேசஞ்செய்து வந்தாய். ஆயினும் முதன்முதலில் உன்னிடம் கோபமும் த்வேஷமுமே உதித்ததெனக்கு. நீ முன்னிருந்த பர்ணசாலையைவிட்டுப் பெயர்ந்த பொழுதுதான், கீர்த்திக்கும் பொருளுக்கு மாசைப்படாதவன் நீயென்பது நிஸ்ஸந்தேகமாகத் தெரிந்தது. அதுமுதல் தான் உன் வார்த்தையில் கவனமும் கௌரவபுத்தியு முண்டாயின. அதனால் நானேதான், உனக்கு உணவுப்பொருள் தட்டாமலிருக்க வேண்டி, வாரந்தோறும் 'ஸம்பார' மூட்டையொன்று கட்டிவந்தேன்" என்று சொல்லும்போதே, திடீரென்று, கரித்துணியால் கண்ணாடியைச் சுத்தம்பண்ணினவன் ஞாபகம் வந்தது ஸங்யாசிக்கு. அதன் தாத்பர்யமும் செவ்வனே விளங்கிற்று.

'துணியிலிருக்கும் கரி நீங்கும்வரை, கண்ணாடி சுத்தப்படவில்லையல்லவா? கரிநீங்கிச் சுத்தமான பின்புதானே, புறவஸ்துவாகிய கண்ணாடியின் அழுக்கை யெடுக்க சக்தியுள்ளதாயிற்று? அதுபோலவே தன் புகழையும், ஜீவனோபாயத்தைப் பற்றியுங் கவலைப்படுவதை யொழித்து, மனது நிராசையால் தூய்மைப் பட்டபின்தான், திருடன் மனதையுஞ் சுத்தமாக்கச் சக்தி வாய்ந்த தென்றும், அதனாலே தான் மாதுளங் கட்டையொன்று மறுநாள் துளிர்த்ததென்றும், அறிந்துகொண்டான். இவன் இவ்வாறு யோசித்துக் கொண்டிருக்கையில், திருடன் மறுபடியும் ஆரம்பித்தான்.

"இருந்தாலும் என் மனம் திரும்பவில்லை. பின்பு வெகுகாலங்கழித்து, கோபால் செட்டி மகனை நான் பிடித்தபொழுது, அவனை விடுவிக்கவேண்டுமென்று, மன்றாடியபொழுது நீ உயிரைத் திரணமாகவெண்ணியதையும் கடவுளிடம் அசைக்கமுடியாத முழு நம்பிக்கை வைத்திருப்பதையுங் கண்ட பின்புதான் என் மனம் நல்வழியில் திரும்பத்தொடங்கியது."

மறுபடியும் இங்கே ஸங்யாசிக்கு மனம் கவலை பாய்ந்து, ஆஸநப்பலகை யிழைத்த தகப்பனும் பிள்ளையும், ஞாபகத்துக்கு வரவே, அதன் பொருளும் ஸுலபமாக விளங்கிவிட்டது. "பலகை கெட்டியாகப் பிடிக்கப்படாத வரை, இழைப்பது ச்ரமமாயிருந்தது. அதேபோல், ஸ்திரமான நம்பிக்கை யொன்றிலுமில்லாமல், மனம் பயத்தால் ஊசலாடும் வரை தூய்மைப்படவும், பிறரை நல்வழிப்படுத்தவுமியலாது, மரணத்துக்கும் அஞ்சாது, எதற்குங் கடவுளிருக்கிறார் என்று மனதைப் பகவானிடம் அசையாமல் நிலைக்கவைத்த பின்புதான் மனம் சுத்தியடைந்து, திருடன் மனதையும் இளகச்செய்யுந் திறமை பெற்றதென்றறிந்தான்.

மறுபடியுந்திருடன் தன் கதையைச் சொல்லிக்கொண்டேயிருந்தான். "ஆனாலும், என் மனம் முற்றிலுங் கனியவில்லை. யோசனையாகவே யிருந்தது. இன்று என்னுடைய பிடிவாதத்திற்கும், கெட்ட செயல்களுக்குமாகப் பரிதபித்து, நல்ல புத்தியருளும்படி, அன்பும் ஆராமையும் பொங்க நீ தபித்தபொழுதுதான் என்மனம் பூராவும் உன்னால் கட்டுண்டது. இனி யென்னை உன் சிஷ்யனாகக்கொண்டு நன்னெறியை உபதேசித்து என்னை யீடேற்ற வேண்டும்" என்று ப்ரார்த்தித்து நின்றான்.

உடனே ஸங்யாசிக்கு, தாரமிழந்தவன் அடுப்புமூட்டிய விஷயமும், அதனுட்பொருளும் தெற்றென விளங்கிற்று. சிராத்தூள் நன்றாகப்பற்றியெறிந்தபின் விறகிட்டதாலதானே,

உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?

விறகிலும் நெருப்புப் பிடித்தது. அதுபோலவே, பிறனுடைய ஏழ்மையும் பரிதபிக்கத் தகுந்ததுமான ஸ்திதியைக் கண்டு, மனக்கசிவினால் தவிக்கும் ஒருவனுக்குத்தான், பிறன் மனதிலும், நல்லெண்ணமாகிய தழலை மூட்ட முடியும். நான் இத்திருடன் கதிக் கிரங்கியதால்தான் அவன் மனம் பரிசுத்தப் பட்டது" என்று ஸந்தேகம் தெளிந்ததும் கடவுளின் அருளைப் பாராட்டி, அத்திருடனோடு பர்ணசாலை சென்று பார்த்த காலையில், மூன்றாவது கட்டையுந் துளிர்விட் டிருப்பதைக் கண்டு ஸந்தோஷித்துத் தன் குடிசை வந்து திருட சிஷ்யனோடு வெகுநேரம்வரை தத்வவிசாரம் செய்துவிட்டுப் படுத்துறங்கினான்.

காலையில் எழுந்து பார்க்கையில் ஸந்யாசி இறந்து கிடந்தார். அவருடைய கார்யம் முடிவடைந்தது. பாபத்திற்கு ப்ராயச்சித்தமு முடிந்தது. இயன்ற மட்டும் ஆசையை விலக்கி ஸகலமும் கடவுள் செயல் என்ற த்ரு – நம்பிக்கையையே ஊன்றுகோலாகக்கொண்டு, பிறர் துன்பத்தையும் தன் துன்பம்போலவே யெண்ணியிரங்கியவர்களுக் குதவுவதே, உலகில் தீமையை யகற்றி நன்மைபுரியும் வழி என்பதைத் தெரிந்துகொண்டான். அதை ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டு, அதற்கிணங்க நடப்பதன் நிமித்தம் இக்கதை இங்கு ஈசனருளால் வரையப்பட்டது. சுபம். சுபம். சுபம்.

ஓம் தத் ஸத்.

## வஸந்த மந்திரம்

(152-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ஒன்பதாம் அதிகாரம்.

### பாட்டுக் கச்சேரி

அஸ்தமித்து ஒரு நாழிகையிருக்கும். மந்திராலோசனை மண்டபம் சொலிக்கின்றது; மேற்குப்புறம் ஸிம்மாஸனம் அமைத்திருக்கின்றது. அதற்கு நேரே கீழ்க்கோடிவரையில் 100 அடி நீளம்; இரண்டு நேர்த்தியானகாச்மீர ரத்ன கம்பளங்கள் விரித்திருக்கின்றன. அதில் இன்னும் ஜனங்கள் நிரம்ப உட்காரவில்லை. அரசபரிவாரங்களும், மந்திரி பிரதானி இவர்களும் இன்னும் வரவில்லை. சிறப்புற்ற பிரபுக்களிற் சிலர் வந்துவிட்டனர். இன்னும் சிலர் வரவேண்டும். இது முக்கிய மண்டபம். இதன் இருபுறத்திலும் இரண்டு தாழ்வாரங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் 100 அடி நீளம், 25 அடி அகலம். இவைகளுக்கும் முக்கிய மண்டபத்துக்கும் நடுவில் கல்லால் இழைத்த வளைவுகள் பல. அவ்வளைவுகளின் ஒவ்வொரு தூணின் பக்கத்திலும் ஒவ்வொரு வீரன் உருவின கத்தியுடன் அசையாமல் சித்திரப் பதுமைபோல் நிற்கின்றான். தென்புறத்துத் தாழ்வாரத்தில் மேல்பாதி, இராணுவ வீரர்களுக்கு; அவர்கள் எல்லோரும் வந்து கூடிவிட்டனர். கீழ்ப்பாதி வர்த்தகர்களுக்கும் ஏனையோர்க்கும்; அதுவேபோல் வடபுறத்துத் தாழ்வாரத்தில் சாதாரணக் குடிகள்; இத்தாழ்வாரமும் நிரம்பிவிட்டது.

நான்கு புறத்திலும் கதவுகளும் ஜன்னல்களும் நன்றாய்த் திறந்திருக்கின்றன. கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் நடுவே உள்ள இடங்களில் பலவகையான விசேஷ சித்திரங்கள் வரைந்திருக்கின்றன. ஒருபுறம் இராமாயணம் முழுவதும் காட்டப்பட்டிருக்கின்றது. அதற்குச் சேர்ந்ததுபோல் நளசரித்திரம்; அடுத்தது துருவனுடைய திவ்ய சரித்திரம்; அடுத்தபடி கண்ணனுடைய திருவிளையாடல்; ஸிம்மாஸனத்துக் கெதிரில் மார்க்கண்டேயர் சரித்திரத்தில் முக்கிய பாகமாகிய 'யம ஸம்ஹாரம்'. 'தம் எல்லை மீறி நடப்போரை இப்படித்தான் தண்டிப்பேன்' என்று அரசர்களுக்குக் காட்டுகிறார் போலும் எம்பெருமான்! நூறு அடி தூரத்தில் இருந்து பார்க்கும்போது சித்திரத்தில் வரைந்திருப்பதுபோல் தோற்றாது, எம்பெருமான் உண்மையாகவே லிங்கத்தைப் பிளந்துகொண்டு கூற்றத்தைச் சாய்ப்பதுபோல் காண்கின்றது. அக்கூற்றுவன் எருமையோ ஈசன் உக்ரத்தைக் கூடக் கவனியாது மேல் எழுந்து எதிர்த்துச் செல்லுகின்றது. ஆ! ஆ! சிற்பீ! உன் சாமர்த்தியமே சாமர்த்தியம்! எத்தனை பேரை நீ இன்று ஒருங்கே சந்தோஷமும் ஆச்சரியமும் அடையும்படி செய்கின்றாய்!

நடுமண்டபத்தின் உயரம் 40 அடி இருக்கும். மேற்றளத்தின் நடுவிலிருந்து, இரண்டு

உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்துக்கு இரண்டு பக்கம் இடி.

அடிக்கு ஓர் விளக்காய்ப் பல விளக்குகள் தொங்குகின்றன. இவைகள் எல்லாம் உச்சி னிமா நகரில் செய்யப்பட்ட பளிங்கு விளக்கு கள். முகுந்தன் என்னும் ரஸாயன சாஸ்திரி யால் அமைக்கப்பட்ட ஒரு யந்திரத்தின் உதவி யால் எரிவதுபற்றி அவை வெளிச்சம் ஏராள மாய்க் கொடுத்தன. மேற்றளத்தின் இருபுற த்து வளைவிலும் நான்கு அடிக்கு ஒரு ஜன்னல் இருக்கின்றது. அவற்றின் வழியாய்க் கீழ் நடக்கும் விநோதங்களை மேலிருந்து இராஜ பத்னிகளும் அரண்மனை ஸ்திரீகளும் பார்ப் பது வழக்கம். அவ்விடத்திலும் இன்னும் சரியாய்க் கூட்டம் சேரவில்லை. மேலும், கீழும், எல்லாவிடத்தும், மூலை முடுக்குகளி லும், விளக்குகள் கணக்கில்லாமல் ஏற்றி யிருக்கிறார்கள்.

'டும்,' டும்,' 'ஞொய், ஞொய்,' என்று திரா விடர் சுருதி கூட்டுகிறார்கள். பாட்டுக் கச்சேரி ஆரம்பித்துவிட்டது. சரபனும் வந்துவிட் டான். எல்லோரும் சப்தம் செய்யாமல் இருக் கும்படி, உயிர் கொடுக்கப்பெற்ற பாவைகள் போல், தூண்களின் பக்கத்தில் நிற்கும் வீரர் கள் தாழ்வாரத்திலகூடியிருக்கும் ஜனங்களைத் திரும்பிப் பார்க்கின்றனர். எல்லோரும் மௌ னம்! ஆரம்பித்தான் சரபன். தோடி எடுத்து ஆலாபனம்பண்ணுகிறான். ஆரிய ஜனங்களின் தலை ஆடுகின்றது. பேஷ்! பேஷ்! என்கின் றார்கள் சுற்றிலும்!

ஆலாபனம் முடிந்து, பல்லவி ஆரம்பிக்க வேண்டும். அரசன் வருவதற்கு அறிகுறியாக ஜயபேரிகையின் சப்தமும் கட்டியங் கூறு வோர் குரலும் கேட்டன. சற்று நேரத்துக் கெல்லாம் பரிவாரங்களும், மந்திரி பிரதானி யரும் புடைசூழ, அரசன் நுழைந்தான். எல் லோரும் எழுந்து நின்றனர். இருபுறமும் கட்டி யக்காரர் கட்டியம் கூறவும், வேதியர் ஆசீர் வதிக்கவும், அரசன் சிம்மாஸனத்தின் படி யேறி, பீடத்தில் உட்கார்ந்தான். பிறகு கையை அமர்த்தவே, அனைவரும் தத்தமிடத்தில் அமர்ந்தனர்.

சரபன் பல்லவி பிடித்தான். அந்த விமர் சையை நாம் இங்கு வர்ணிக்க முடியுமா? அர சன் முதல், சேவகன் வரையில் இன்பம் அடையாதவர்கள் கிடையாது. பொழுதாக வாக, கூட்டம் பெருகிவிட்டது.

இவ்வாறு எல்லோரும் கானரஸம் நுகரும் போது சற்றே நாம் மேல்மாடிக்குப் போ வோம். பல்லவி எடுத்துச் சிறிது நேரத்துக் கெல்லாம், இராணியாரும் லலிதையும் மேல் மாடி வந்து சேர்ந்தனர். இருவரும் ஜன்ன லின் புறமாய் நின்றுகொண்டு சரபன் பொழி யும் அமிர்தத்தைக் காதின் வழியாய் உட் கொள்ளுகின்றனர்.

தோடி இராகம் முடிந்தது; அரசன் "சரப! நன்று! நன்று! மெச்சினேம் உன் திறமை யை; சைவ சமயாசாரியர்களின் ஸ்தோத்தி ரங்களில் சிலவற்றைப் பாடக் கூடுமானால் தயவு செய்வாய்" என, சரபனும், "அப்பநீ அம்மைநீ அன்புடைய மாமனும் மாமியுநீ ....................." என்னும் தேவாரத்தைத் துவக்கினான். பொருள் படவில்லை பலருக்கு; என்றாலும் நெஞ்சம் உருகுகின்றது; நிலை யில்லா ஆனந்தக் கடலில் மூழ்கினர். 'இவர் நாரதரோ' என்றாள் ஒருமாது சிரோமணி! 'இவர் வரப்பிரஸாதியாம்' என்றாள் ஒரு நங்கை! 'கானரஸத்தினும் சிறந்தது மற்றொன் றுண்டோ' என்றாள் அரசி! 'உண்மையாகவே என் மனம் உருகுகின்றது; இல்லையா அம்மா!' என்றாள் லலிதாம்பிகை. "ஆம் குழந் தாய்! உன் திருக்கல்யாணம் வரையில் இவ் வித்துவானை நிறுத்திக்கொள்வார் போலும் உன் தந்தை" என, லலிதை முகம் சிவந்து தலை குனிந்தாள்.

சரபன், அத்தேவாரத்தை முடித்து "எத் தாயார் எத்தந்தை, எச்சுற்றத்தார்......"என் பதை எடுத்துச் சரமாரியாய்ப் பொழிகின் றான்! ஜனங்களின் தலையாட்டமும், கைய சைப்பும், துடைத்தட்டும் சொல்லிமுடியா. இவ்வாறு ஸ்திரீகளும் புருஷர்களும் சரபன் வீசிய கானவலையில் அகப்பட்டுக்கொண்டு வேறு எண்ணமே யில்லாமல், அவன் ஆட் டியபடியெல்லாம் ஆடிக்கொண்டு இன்பக்கட லில் மூழ்கியிருக்க, காமன்வலையில் அகப்பட் டுக்கொண்ட லலிதை ஜயபாலராஜன்மேல் தியானமாய் அவ்விடம் விட்டு ஒருவருக்கும் தெரியாமல் மெள்ள நகர்ந்துவிட்டாள்.

## பத்தாம் அதிகாரம்.

## முத்திரை யிட்ட கடிதம்

மண்டபத்துள் பாட்டுக் கச்சேரி நடக்கும் போதே வெளியில் நிற்கும் இரண்டு காவலா

ளிகளும், தங்கள் காதில் அரைகுறையாய் வந்து விழும் கான அலைகளைமட்டும் பெற்று அவைகளே தங்களுக்குப் போதுமென்று திருப்தியுடன் சில சமயங்களில் கவனித்துக் கேட்டுக்கொண்டும், சில சமயங்களில் மேல் வரும் கல்யாணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டும், பக்கத்துக்கு ஒருவராய் நிற்கின்றனர். “ஏமாங்கா! நாளக்கிப் பாட்டுக் கச்சேரியானு, நம்ம காவல் முறையில்லியே; நாம் பொ மொதல்லே உட்புற மண்டபத்துக்குப் போயிருக்கணும்; இப்படி அரைகுறையாக் கேட்டா தீரப்போவுது! கேக்கணும் மொதலிலிருந்து கடைசிவரைக்கும்; அப்படித்தான் செய்யப்போகிறேன் நீயும் வரயல்ல” என்ருன் சித்திரக்கிரீவன் என்பவன்.

“நீ என்ன! பே சங்கீதம் சங்கீதம் எங்கிறை; எனக்கு ஒண்ணும் தெரியரதில்லே. அடிக்கிருனே மத்தளம் அதுதான் எனக்குத் தெரியுது; பாட்டு நிறுத்திப்போட்டு இப்போ அடிக்கிருன் பார்! தீர்மானம். பேஷ் பேஷையா! இதுதான் நமக்கு ஸரி; நீ போனுல் அதுக்கென்ன நானும் வரேன்.”

“போவுது; நமது அம்மணிக்குக் கல்யாணம் நிச்சயமாச்சே, அதுவே போதும். ராசாவுக்கு ரொம்ப வருத்தம்; அம்மம்மா! ஏங்கிவிட்டார் பாவம்!”

“அதுதான் நமக்கும் சந்தோஸம்; ஏதோ கல்யாணத்தில் சரியாய் நடந்து நல்லபேர் வாங்கிக்கிட்டோமானுக்கா அப்புறம் தேவலே; என்னுங்கிறே சித்திரா.”

“அது சரி: நல்ல பேரும் வாங்கணும்; அவுங்களுக்குத் தக்க மரியாதையும் பண்ணணும்; வேடிக்கையும் பாக்கணும்; நல்ல மஹாராஜா நம்ம அரசனைப்போல் உண்டா சொல்லப்பா பாக்கலாம்! அடடே உள்ளே எல்லாரும் கைகொட்டராங்கோ!”

“பாட்டு நன்னு இருக்குது என்னு கொட்டருப்போலிருக்கு;—நமது ராணியும் சரி; அம்மணியும் சரிதான்; எல்லாரும் தங்கமான மனுஷர்; அன்னிக்கு அம்மணி கோயிலுக்குப் போய்வந்துதே, அன்னிக்கு அரமனை வாசலில் சேவகம் பண்ணிக்கிட்டு இருந்தேன். ‘என்னடா ஏமாங்கதா சௌக்கியமாய் இருக்கையா’ என்னிச்சு; நமக்கு வெகு சந்தோஷமாய்ப் போச்சு—.”

“சந்தேகமென்ன; அம்மணி சாதாரணம் என்னு எண்ணிக்கிட்டையா? நம்ம குலதைவமடா! மஹாராசி! அவளை நினைத்துக்கிட்டால் அல்லவா நமக்குச் சோறு கிடைக்கும்?—”

இதற்குள் மெத்தைப் படியின் வழியாய் யாரோ நடக்கும் சப்தம் கேட்டது. ஏமாங்கதன் வாசற்படியை விட்டு உள்ளே தென்புறமாய் மெத்தைப்படிக்கு ஓடினுன். ஏனெனில், ஆடவர் எவராவது மேலே மெத்தையேறிப் போகிருர்களோ, பெண்டிர் இருக்கும் இடமாயிற்றே என்று அவனுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. அவன் போகும் சமயத்தில் ஓர் பெண்ணுரு சட்டென்று லதாக்கிருஹத்தில் மறைவது மட்டுந்தான் தென்பட்டது. யாரோ இராஜ ஸ்த்ரீ அரண்மனையுட் போயினள் என்று எண்ணித் திரும்பி விட்டான் ஏமாங்கதன்.

சித்திரக்கிரீவன் “என்னடா தம்பீ அங்கே, என்ன—” என்று கேட்டான்.

“யாரோ அம்மா அரமனை போவுது தோட்டத்து வழியா—”

“இவ்வளவுதானு! இதுக்கா இந்த ஓட்டம் ஓடினே.”

“யாராச்சி ஆம்பளே மேலே போரானே என்னவோ என்னு ஓடினே.”

உண்மையாகவே போனவள் லலிதை. மேற்சொன்னபடி எல்லாரும் கான ரஸம் அருந்தும்போது மெதுவாய் நழுவிவிட்டாள் அல்லவா? அவள்தான் அரண்மனைக்குப் போனவள். ஏமாங்கதன் வந்து படியண்டை பார்ப்பதற்குள் லலிதை லதாக்கிருஹத்தில் நுழைந்துவிட்டபடியால் அவள் இன்னுரென்று ஏமாங்கதன் அறிந்துகொள்ள முடியவில்லை.

இவ்வாறு இவ்விரண்டு சேவகர்களும் பேசிக் கொண்டிருக்கும் சமயத்தில் சுற்று வளைப்புக்கு வெளியே விளக்கு வெளிச்சத்தில் மூன்று குதிரைகள் வருவதைக் கண்டனர். முதலில் வந்தவர் இருவரும் மகமதியச் சிப்பாய்கள். இவர்களுக்குச் சற்றுப் பின்னே வந்தவர் ஒரு பிராமணோத்தமர். அவருக்குப் பின்னுல் மூன்று சேவகர்கள் தங்கள் குதிரைகளின்மேல் வளைப்புக்கு வெளியே நின்றுவிட்டனர். உள்ளே நுழைந்த மூவரும் மண்டபத்தின் முன்னே குதிரைகளை விட்டிறங்கினர். பெரிய சிப்பாய் தன் குதிரையையும்,

உலக்கைப் பூசைக்கு அசையாதது திருப்பாட்டுக்கு அசையுமா?

பிராமண எஜமானன் குதிரையையும் இளம் சிப்பாயிடம் ஒப்புவித்துவிட்டு, பிராமணரை அழைத்துச் தலைவாயிலுக்குச் சென்றான். மண்டப வாயிலில் வரவும், ஏமாங்கதன் "சுவாமி! தாங்கள் யார் இப்பொழுதில் இங்ஙனம் வந்தது!" என்று கேட்டான்.

துருக்கச் சிப்பாய் "யாரா? யாரென்று தெரியவில்லை உனக்கு! விந்துபாக்ஷா ஆமத் சுல்தான் பகதூர் சேவகன் நான்! எங்கள் பார்ப்பார மந்திரி இவர் தெரியாது உனக்கு!" என்று இந்துஸ்தானியில் சொன்னான்.

ஏமாங்கதன் "நீ சொல்வது ஒன்றும் தெரியவில்லையே!" என்றான்.

பிராமணோத்தமர் "பிள்ளாய் விந்துபாக்ஷா ஆமத் சுல்தானிடமிருந்து, அவர் பிரதானி ஒருவர் அனந்தபட்டர் அவசரகாரியமாய் வந்திருப்பதாகச் சொல்லு; உடனே சொல்லிவா?" என்றார்.

ஏமாங்கதன் "சுவாமீ! உள்ளே பாட்டுக்கச்சேரி நடக்குதுங்கோ; இப்பொழுது போகவேண்டுமென்று உத்தரவானால் உடனே போகிறேன். தங்கள் சித்தம் எப்படியோ?" என்று சற்றே தயங்கினான்.

சிப்பாய், ஏமாங்கதன் சொல்வதை அரைகுறையாய் அர்த்தம் பண்ணிக்கொண்டு "போவென்றால் உனக்கு என்ன வோய்! என்னவோ பேசுகிறாய் யோசியாமல்! நாங்கள் யார் என்று நினைத்தாய்? செலவுக்கு வேண்டுமா ஏதாவது? உஷார்! மகனே! உஷார்!—" என்றான்.

அனந்தபட்டர் "சிபாய்! நீ ஏன் கோபிக்கின்றாய்? சேவகன் சொல்வது சரியே! அரசன் பாட்டுக்கச்சேரியில் இருக்கும்போது சேவகன் போய் அவரைத் தொந்தரவுசெய்வது நன்றாய் இராது என்ற அபிப்பிராயத்துடன் அவ்வாறு சொல்லுகின்றான்—(மறுபடி ஏமாங்கதனைப் பார்த்து) "நல்லது பிள்ளாய்! என் காரியம் மிக அவசரம்; நான் மறுபடி நாளைகாலையில் இவ்விடமிருந்து காரியம் முடித்துவிட்டுப் புறப்படவேண்டும். ஆகையால் என் வரவை உடனே தெரியப்படுத்த வேண்டியது அவசியம்; போய்வா—" என, ஏமாங்கதன் சிறிது யோசனைசெய்து "சித்திரா! உள்ளேபோய் மந்திரியார் பக்கத்தில் குமாஸ்தா நிற்கின்றனர் அவரிடம்சொல்லி அரசனுக்குச் சங்கதி தெரிவித்து வா" என்றான்.

சித்திரக்கிரீவன் உள்ளே போக, ஏமாங்கதன் தன்முன்னே இருபுறமும் வளர்த்திருக்கும் பூஞ்செடிகளையும் அவற்றின் நடுவில் அலங்காரமயப் போட்டிருக்கும் கல்லாற் செய்த ஆஸனங்களையும் காண்பித்து, "ஐயா தாங்கள் உட்கார்ந்து சற்று இளைப்பாறவேண்டும்" என்று சொல்லுமுன்னரே, வெகுதூரம் குதிரை சவாரி செய்துவந்து களைத்துப்போன அனந்தபட்டர் செடிகளுள் நுழைந்து ஒரு ஆஸனத்தில் உட்கார்ந்தார். கீழே நிலத்தில் உட்கார்ந்துகொண்டான் சிப்பாய். உட்கார்ந்தவுடன் அனந்தபட்டர் சிப்பாயைப் பார்த்து, "மல்லீக், உன்வாலை இங்கே வீசாதே, நறுக்கிவிடுவார்கள். ஜாக்கிரதை" என்றார்.

நமது பழைய சிநேகிதனான மல்லீக் "என்ன சாமி நான் செய்கிறேன்; நம்மை அவமரியாதை செய்தால்—"

"சரி! சரி!! சும்மாவிரு, பார்ப்போம்"

அனந்தபட்டர் என்ன காரியத்துக்காக உதயபுரிக்கு வந்திருக்கின்றார் என்பது நமக்குத் தெரியும். ஆனால் பிரதாபசிங்குக்காவது அவர் சேவகர்களுக்காவது அவர் வந்த காரியம் எப்படித் தெரியும்? அனந்தபட்டருக்கோ, இக்காரியத்தில் தான் சிக்கிக்கொண்டதற்கு மிகவும் வருத்தம். தன்னுடன் வந்த 'மொரட்டுச் சிப்பாய்' செய்யும் வேலைகளைப் பொறுக்கமாட்டாமல் ஒருபுறம் துக்கம்; ஏனெனில், வழியில் வரும்போது ஒவ்வொருவருடனும் சண்டை பிடிப்பதுதான் அச்சிப்பாய்க்கு வேலை! இவ்விசாரங்களோடு, அரசன் பிரதாபசிங்கனைக் காணவும் சமயம் ஏற்படாதோ, என்று ஒருபுறம் ஏக்கம்! "அவர் எதிரே போனால் என்ன சொல்வது? எவ்விதம் சம்பாஷிப்பது? கடிதத்தை முதலில் காட்டுகிறதா? அவரே பிற்பாடு பார்த்துக்கொள்ளலாமென்றாலும் நன்றாய் இருக்குமே" என்று எண்ணுகிறார். "எவ்வளவோ பேர் கூடியிருக்கும் சபையில் 'பூஜை சமயத்தில் கரடி விட்டதுபோல்' நான் எவ்வாறு செல்வேன், சிவனே! சிவனே!!" என்று தன் புத்தி நுட்பம் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் உபயோகித்து ஆலோசனையில் ஆழ்ந்து கிடந்தார்.

"ஏண்டா என்ன சொன்னார், உங்கள் ராஜா?" என்று சிப்பாய் கத்தியது,ஏமாங்கதன்

உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடலாமா?

மண்டபத்திலிருந்து திரும்பிவந்து விட்டான் என்று அனந்தபட்டருக்குக் காட்டியது. அனந்தபட்டரும் ஏமாங்கதன் முகத்தைப் பார்க்க, அவன் "சுவாமீ, உங்களை உடனே உள்ளே அழைத்து வரும்படி உத்தரவாய் இருக்கின்றது தங்களை வெளியே இதுகாறும் நிறுத்திவைச்சதே எங்கள்மேல் பிசகு; மன்னிக்கவேண்டும். எழுந்திருக்கலாம்" என, அனந்தபட்டர் "சிப்பாய், நீ இவ்விடமே இரு! இங்கிருந்து எங்கேயாவது போய் ஒருவருடனும் சண்டையிடாதே—சேவகா! அதோ நிற்கின்றானே, கவுஸ், அவன் மிக நல்லவன். அவனுக்குத் தக்க இடம் காட்டு. குதிரையைக் கட்டிவிட்டு வரட்டும். இடம் காட்டாவிட்டால் நாளை வரை ஆனாலும் சரி, அங்கேயே நிற்பான்" எனச்சொல்லி மறுபடியும் கவுஸ் இருக்குமிடத்தை நோக்கி "கவுஸ்! குதிரையைக் கட்டிவிட்டு நீயும் மல்லீக் இருக்குமிடம் வந்து சேர்" என, சிப்பாய் "மஹாராஜ்! நானும் தங்களுடன் மெய்க்காப்பாளனாஉள்ளே வருகிறேன், மஹாராஜ்!" என, அனந்தபட்டர் "மெய்க்காப்பாளனும் ஆச்சு பொய்க் காப்பாளனுமாச்சு, போவோம் இரு இங்கே சுகமாக" என்று சொல்லிவிட்டுச் சித்திரக்கிரீவனுடன் உள்ளே நுழைந்தார்.

ஏமாங்கதன் சித்திரக்கிரீவன் பக்கத்தில் சென்று காதோடு "அண்ணே! நீ போய்ச் சாமியாரை உள்ளே விட்டுவா; அப்படியே நீ ஆசைப்படுவதால் கொஞ்சம் பாட்டுக் கேட்டுவா" என்று சொல்லி நகைத்தான்.

உள்ளே சென்ற அனந்தபட்டர் மண்டபமத்தியில் சிம்மாசனத்துக் கெதிரே விட்டிருந்த வழியூடேசென்று, சபா மண்டபத்தின் பக்கத்தில் வந்து சேர்ந்தார். உடனே அனந்தபட்டர் வணங்க, அரசன் தலையை அசைத்து, வரவேண்டுமென்று சொல்லித் தன் பக்கத்தில் ஓர் ஆஸனத்தில் அமரும்படி சொன்னார். அவரும் அப்படியே செய்ய அரசன் மெதுவாய் "எல்லோரும் க்ஷேமமா?" என அனந்தபட்டர் "ஆம்" என்று தலை குனிந்தார்.

அரசன் "நல்ல சமயத்தில் வந்தீர். நிரம்ப சந்தோஷம்" என, அனந்தபட்டர் "இராஜாதிராஜனே, நான் வந்த வேலை வெகு அவசரம். உங்களிடமிருந்து இக்கடிதத்துக்கு உடனே பதில் பெற்றுவரும்படி என் அரசனுடைய உத்தரவு. ஆனால், நானே இக்காரியத்துக்கு வரவேண்டியதாயிற்றே என்றுதான் எனக்கு மனவருத்தம். ஆனாலும் தீரவில்லை" என, அரசனுக்குக் கொஞ்சம் சந்தேகமுண்டாயிற்று. ஏன் இப்படிப் பேசுகிறார் என்று அவர் முகத்தை உற்றுப் பார்த்தான். அவர் தலை குனிந்துகொண்டார். என்ன விஷயமோ, ஏதோ, என்றறிய அரசனுக்கு ஆவல் தூண்டியபோதிலும், மேலுக்குமட்டும் புன்சிரிப்போடு "என்ன காரியம், ஐயா" என்றான்.

அனந்தபட்டர் "அரசே, நான் சொல்வதைவிடத் தாமே இக்கடிதத்தைப் படித்தால் விஷயம் தெரியவரும்" என்று முத்திரையிட்ட கடிதம் ஒன்றை அரசன் கையில் கொடுத்தார். அதைக் கையில் வாங்கிக்கொண்டு தன் வலது புறத்தில் உட்கார்ந்திருந்த மந்திரி சுமதியின் முகத்தைப் பார்க்க, அவன் எழுந்து வந்து, கடிதத்தைத் தான் வாங்கி உடைத்து அரசன் கையில் கொடுத்தான். அரசன் படிக்கத் தொடங்கவே, ஒரு நிமிஷத்தில் அரசன் முகம் வாட்டம் கொடுத்தது. கடுத்த முகத்துடன் கடிதத்தை உற்றுப்பார்ப்பானாயினான். நெற்றி வியர்த்தது உதட்டைக்கடித்துக் கொண்டான். முகம் கறுத்தது. சபை நடுங்குகின்றது. ஒருவன் முகத்தை ஒருவன் பார்க்கின்றான். எல்லோரும் அனந்தபட்டரைப் பார்க்கிறார்கள். "யமனோ இந்த வேஷத்துடன் இராஜசபையில் புகுந்தான்!" என்று எண்ணினர் சிலர். "சனி பகவானோ!" என்று ஏங்கினர் பலர். ஆனால் அவரோ ஒருவரையும் பார்க்கவில்லை; குனிந்த தலை நிமிரவேயில்லை. மூச்சுக்கூடப் பலமாய் விடவில்லை ஒருவரும். ஒவ்வொருவனுக்கும் தன் மார்பு அடிக்கும் சப்தம் கேட்கின்றது. சரபனுடைய வீணை தானே நின்றுவிட்டது. விழிக்கிறான் சரபனும். நிற்கின்றார் சுமதி மந்திரியார் ஸதம்பம் போல் பக்கத்தில்! அரை நாழிகையாயிற்று. அது சபையோர்க்கு ஒரு யுகம்போல் தோன்றிற்று. அரசன் கடிதத்தை மடக்கிக்கொண்டு தலை நிமிரும்போதுதான், கீதம் நின்று விட்டதென்பதையும், எல்லோரும் தன்னை பார்க்கின்றனர் என்பதையும் அறிந்தான்.

எப்படியும் பிரதாபசிங்க ராஜன் க்ஷத்திரியன் அல்லவா! இராஜாதிராஜர் வம்சத்தில்பிறந்

உல்லாச நடை மேனுக்குக் கேடு, மினுக்கு எண்ணெய் தலைக்குக் கேடு.

தவன். தன்மனவலிமைகுறைந்ததென்பதைப் பிறர் அறியும்படி செய்துகொண்டதற்காகச் சற்றே தன்னை நொந்தவராய், முகத்தை மலர வைத்துக்கொண்டு பேச ஆரம்பித்தார். நெஞ்சிலிருந்து வார்த்தை வரவில்லை. ஒருதரம் கனைத்துவிட்டுக் கொஞ்சம் உரப்பாய் “சரப! அரசன் கேட்பதற்கு மட்டும்தான் ஏற்றதோ உன் வீணை! எல்லோரும் உன் பாட்டையும் வீணாகானத்தையும் கேட்க ஆவலாயிருக்க, இங்ஙனம் ஏன் அப்பா நிறுத்திவிட்டாய்? நான் கடிதம் படித்தால், நீ வீணை வாசிப்பதில் என்ன தடை,” என்று சொல்ல? சரபனும் தலை குனிந்து “என்ன மாயமோ—ஏதோ—” என்று நீலாம்புரியில் மறுபடியும் பாடத் தொடங்கினான்.

பாட்டு ஆரம்பித்ததும், பிரதாபசிங்கன் அனந்தபட்டரைப் பார்த்து, “உம்மரசன் கொடுத்த கடிதமோ இது?” என, அனந்தபட்டர் குனிந்தபடியே “ஆம்” என்றார்.

அரசன் மௌனமாய்ப் பாட்டுக் கேட்பது போல் பாசாங்கு செய்தான். ஆனாலும் “அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முக”மாதலால் எல்லாருக்கும் அரசன் விசாரப்படுகிறார் என்பது தெரிந்துவிட்டது ஆகையால் பாட்டுக் கேட்பதில் அநேகர் பிரியப்படவில்லை. அதேசமயத்தில் ‘திப் திப்’ என்ற சப்தம் வாசற்புறமிருந்து கேட்கவே, அதன் பக்கத்தில் இருந்த சிலர், வீதியில் ஓடினர். அவர்களைப் பார்த்துப் பலர், விஷயம் என்னவென்று தெரியாமலே தாங்களும் ஓடினர். இதுதான் நல்ல சமயம் என்று எண்ணி அரசனும் சபை கலையலாம் என்று உத்தரவு கொடுத்து அந்தப்புரம் நோக்கிப் புறப்பட்டார். சரபனும் மங்களம் பாடிவிட்டான். மந்திரியும் அரசனுடன் சென்றான். போகும் அவசரத்தில், பிரதாபன் அனந்தபட்டருக்கு உபசாரம் கூடச் சொல்ல மறந்துவிட்டான். இதைப்பார்த்து நின்ற வீரேசன் என்ற இரண்டாவது மந்திரி அனந்தபட்டரிடம் நெருங்கி “ஐயா! உமக்கு வீடு தயார்செய்து இருக்கிறது. அவ்விடம் தங்களை அழைத்துப் போகும்படி அரசன் உத்தரவு; போவோம் வாரும் இப்புறமாய்” என்று வீதிப் புறத்து வாயிலின் வழியாய் அவரை அழைத்துச் சென்றான். உண்மையாய் அரசன் யாதொன்றும் சொல்லவில்லை. என்றாலும் மந்திரிமார்கள், சொல்லாமலே அறிந்து செய்யவேண்டிய காரியமன்றோ இது!

வீரேசனும் அனந்தபட்டரும் வீதிவழியாய்ப் போகப் பிரயத்தனப் பட்டபோது அங்கே நிகழ்ந்த அலங்கோலத்தை மேல் அத்தியாயத்தில் பார்ப்போம்.

---

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### பூனையால் வந்த பெருங்கேடு

நான்கு பேர்களாகச் சேர்ந்து கூட்டாகப் பஞ்சு வர்த்தகம் பண்ணினார்கள். அவர்கள் நல்ல புத்திசாலிகள்; அதிலும் முன் யோசனையுள்ளவர்கள். ஆகவே, எலிகளால் பஞ்சு மூட்டைகளுக்குக் கெடுதி நேரிடாது பாதுகாக்க, ஒரு பூனையை வளர்த்துவந்தார்கள்; எலிகளை மென்று தின்று பஞ்சுமூட்டையைக் காக்கும் அந்தப் பூனையினால் தமக்கு வரக்கூடிய நன்மையை உத்தேசித்து, அதனிடம் தாம்கொண்ட அன்பைக்காட்ட அதன் கால்களுக்கு நல்ல ஆபரணங்களை அணிவிக்க எண்ணங்கொண்டார்கள். ஆகவே அவர் ஆளுக்கொரு காலாகப் பங்காசாரங்கொண்டு அதன் கால்களைத் தண்டை கொலுசு முதலான நகைகளால் அலங்கரித்தார்கள். பாலைக் கண்டால் பதுங்கித் திருடுவது பூனைக்கு ஸஹஜம். அதன் தர்ம விருத்தியைச் செய்யும்போது, அப்பூனையின் காலொன்றில் காயம்பட்டது. அவ்விரணத்தைஆற்ற அக்காலிற்குச் சுதந்தரக்காரன் அதற்குஎண்ணெய்ச்சீலை ஒன்றைச் சுற்றிவைத்தான். ஆனால் ‘கம்பன் வீட்டுக் கட்டுத்தரியும் பாடும்’ என்பது போல, அவ்வர்த்தகர்களிடம் வளர்ந்த அப்பூனைக்குத் தனது தர்மவிருத்தியை விட மனம் வரவில்லை. அப்படியிருந்ததால் அது அடுப்பங்கரையைத் தேடினால் ஆச்சரியம் என்ன இருக்கிறது? பால் குடிக்கப்போய் நா சூடிக் கொள்வதற்குப் பதிலாக அப்பூனை தன்காலில் சுற்றிய எண்ணெய்ச் சீலை தீப்பற்றும்படி வைத்துக்கொண்டது. அதைக் கண்ட பூனை

உழக்கு உற்றூர்க்கு, பதக்குப் பரதேசிக்கு.

வெருண்டு என்ன செய்வதென்று அறியாமல் பஞ்சு மூட்டைகளின்மேல் விழுந்தடித்துக் கொண்டோடியது. அதனால் அம்மூட்டைகள் அக்கிபகவானுடைய ஸம்பூர்ண அநுக்ரஹத்திற்குப் பாத்திரமாயின.

இவ்விஷயங்களை யறிந்த மற்ற மூன்று கூட்டாளிகளும், பூனைக்காலிற்கு எண்ணெய்ச்சீலை கட்டிய கூட்டாளியைத் தமது நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கும்படி கட்டாயப்படுத்தினர். ஆனால் எதிர்பாராமல் நேர்ந்த நஷ்டத்திற்குத் தான் ஆளாக முடியாதென அவன் வாதித்தான். அதற்கு உடன்படாத அம்மூன்று பேர்களும் நியாயாதிபதியாய் விளங்கின மரியாதைராமனிடம் தமது வியவஹாரத்தைச் சொல்லி விசாரணை செய்யக் கேட்டுக் கொண்டார்கள்.

அந்த நியாயாதிபதி பிரதிவாதியை யழைப்பித்து, நடந்தவற்றை விசாரித்தான்; வாதிகளின் பேச்சையும் கவனித்தான்; மறுநாள் தீர்ப்புச் சொல்வதாகச் சொன்னான்.

இந்த வியவஹாரம் வெகு விநோதமாக இருந்ததால், மரியாதைராமன் எப்படித் தீர்ப்புச் செய்கிறானோ என்பதைக் கவனிக்க வாதிப்பிரதிவாதிகள் தவிர்த்து, அநேக ஜனங்களும் வந்திருந்தார்கள். மரியாதைராமன் ஆசனத்தில் வந்துட்கார்ந்ததும், எங்கும் பெரும் ஆரவாரம் உண்டானது. சற்றுநேரத்திற்குள் அது அடங்கிவிட்டது. அப்போது எல்லோரும் மரியாதைராமன் என்ன சொல்லப்போகிறான் என்று வெகு ஆவலோடு கண் கொட்டாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் செய்த தீர்ப்பு, வெகு அதிசயமானது. அவரது புத்திசாலித்தனத்தை நன்கு விளக்கிய அத்தீர்ப்பு வருமாறு:—

“இந்த விஷயம் அதிசயமானது. பிரதிவாதிகள் சட்டவிருத்தமாக நடக்கப் பிரியப்படாதவர் என்பதை அவர் கொடுத்த அர்ஜியே வெளிப்படுத்தும். அவர் சொல்வதாவது: ‘நாமும் பிரதிவாதியும் உடன்படிக்கைப்படி செய்துவந்த வியாபாரப் பொருள்களாகிய பஞ்சு மூட்டைகள் எலிகளுக் கிரையாகாதிருக்கும்படி ஒரு பூனை வளர்த்துவந்தோம்.’ அப்பூனையிடம் நாங்கள் கொண்ட சுதந்தரத்தைப்பாராட்ட அதன்கால்களை ஆளுக்கொன்று சொந்தம் பாராட்டி, அவரவர்களுக்குச் சொந்தமான காலை ஆபரணங்களால் அலங்கரித்தோம். ஒருநாள் அந்தப் பூனையின் காலொன்றில் காயம்பட்டது. அந்தக் கால் பிரதிவாதிக்குச் சுதந்தரமானது. ஆகவே அவன் அதன் காலுக்கு ஒரு எண்ணெய்ச்சீலை கட்டியிருந்தான். அந்தப் பூனை நெருப்பருகு போகவே, காலிற் சுற்றியிருந்த எண்ணெய்ச்சீலையில் நெருப்புப் பற்றிக்கொண்டது. வெருண்ட பூனை பஞ்சு மூட்டைகளின் மேல் ஓடவே, பஞ்சு மூட்டைகள் வெந்து சாம்பராயின. பிரதிவாதி பூனைக் காலில் எண்ணெய்ச் சீலை கட்டியிராவிட்டால், இந்த விபரீதம் நடந்திருக்காதாகையால், அவன் எங்களது நஷ்டத்திற்கு உத்தரவாதமாயிருக்கவேண்டும்.’ வாதிகள் சொல்வதில் கடைசி வாக்கியம் தவிர்த்து மற்றெல்லாவற்றையும் பிரதிவாதி ஒப்புக் கொள்வதால், அவ்விஷயங்கள் உண்மையா இல்லையா என்பதை நாம் கவனிக்கவேண்டியதில்லை. நாம் கவனிக்கவேண்டியது ஒன்றுதான். அதாவது, பஞ்சு மூட்டைகள் வெந்து நீறானதற்கு யார் உத்தரவாதம் என்பதே. “பூனைக்குக் கால் பதினேழே” என்று காளமேகப் புலவர் பாடியிருக்கிறார். அது சட்ட ஸம்மதப்படாமையால் நாம் கவனிக்கத் தகுந்ததன்று. பூனைக்குக் கால் நான்குதான் என்பது சிறு குழந்தைக்கும் தெரியும். அந்த நான்கு கால்களை, ஆளுக்கொருவராக வாதிப்ரதிவாதிகள் சுதந்தரம் பாராட்டி வந்தனரென்பது இருவராலும் ஒப்பப்பட்ட விஷயம். காலில் எண்ணெய்த்துணி கட்டியபோது அந்தப்பூனை ஓடினதற்கு யார் உத்தரவாதம்? அது ஓடாதிருக்கும் பக்ஷத்தில், துணியும் பற்றியிராது; பஞ்சு மூட்டையும் வெந்திராது. மேலும் அப்பூனை ஓடுவதற்குப் பிரதிவாதிக்கு உரிமையானதும் அப்பூனைக்குச் சொந்தமானதும் ஆன எண்ணெய்த்துணி சுற்றிய கால் காயமடைந்திருந்தபடியால், நடக்கமுடியாது. ஆகவே, நெருப்பண்டை அதுபோக வாதிகளுக்குச் சொந்தமான கால்களே காரணமாகும். அக்கால்கள் நடவாதிருந்திருந்தால், பூனை நெருப்பண்டை போயுமிராது; பஞ்சு மூட்டைகளும் வெந்துபோ யிராது என்பன நன்கு விளங்கும். ஆகவே, யாராவது நஷ்டமடைந்திருந்தால், அது பிரதிவாதியே யல்லாமல் வாதிகள் அல்ல; யாராவது நஷ்டத்திற்கு ஈடு பெறவேண்டுமானால், அதுவும் பிரதிவாதியே

உழவுக்குப் பிணைத்து விடுகிற மாடும், கூட்டுக்குப் பிடித்து விடுகிற ஆளும் உதவாது

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி :—19 துப்பு

நிற்க, வீமமன்னவன் வெகு மரியாதையுடன் ருதுபர்ண மஹாராஜனை எதிர்கொண்டழைத்து உபசரித்தார். தன் பெண்மேல் ஆசைகொண்டு அங்கு அவன் வந்ததை உணராத அவ்வீமராஜன் "அரசரேறே! உமக்கு நன்மையே உண்டாகட்டும்! உமது வரவு நன்மையே பயக்குமாக!" என முகமனியம்பி, ருதுபர்ணரை நோக்கி "தாங்கள் இங்குவர நான் தன்யனானேன். உங்கள் நாடு செழித்து வருகின்றதென நம்புகிறேன். நீங்கள் இருக்குமிடம் மநுநீதி தவறாதென்பது வெளிப்படை. வியவஹாரமில்லாமல் நீங்கள் இவ்வளவு தூரம் வந்திருக்கமுடியாது. தங்கள் விருப்பம் எதுவோ, அதைச் சொன்னால் அதற்கிணங்க நானும் நடப்பேன். இரகசியமில்லாவிட்டால் இங்கேயே சொல்லலாம் என நினைக்கிறேன்" என வினாவினர்.

இம்மொழிகளைக் கேட்ட ருதுபர்ணன் சற்றே சிந்திக்கலானான். முன்னமேயே ஸந்தேஹங்கொண்ட அவன், "ஸ்வயம்வரம் என்ற பேச்சு வீணாச்சு. இங்கு வீமன் மகனுமில்லை; மகளுமில்லை. பிராஹ்மணர்கள் ஒருவரையாவது காணமுடியவில்லை. நாம் வீணே மதி மோசம் போனோம். ஆனால் இதில் ஏதாவது சூழ்ச்சி யிருக்குமென்று நம்பமுடியவில்லை. அந்தப் பிராஹ்மணரும் பொய் சொல்லார்; வீமமன்னவரும் தம் பெண்ணுக்கு இரண்டாவது ஸ்வயம்வரம் செய்வதாயிருந்தால் இம்மாதிரியாகப் பேசார். இது விசித்திரமாக இருக்கின்றது" என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். பேசாது மௌனமாயிருந்த ருதுபர்ணனை நோக்கி "ருதுபர்ணரே! இவ்வளவு நாட் கடந்து நெடுந்தூரத்திலிருந்து என்னைக் காண வந்த காரண மெதுவோ?" என வீம மன்னவர் விநயத்தோடு கேட்டார்.

"தங்களைக் கண்டு என் நன்றியறிதலைக் காட்டவென்றே இங்கு வந்தேன். மற்று விசேஷ மொன்றுமில்லை. பெரியோரைத் தரிசிப்பது பெரும் புண்யமல்லவா?"

"நீங்கள் சொல்லுவதை நம்புவது அஸாத்யம்! அவ்வளவு நாடுகளைக் கடந்து வந்ததற்கு இந்த அற்ப ஸமாசாரம் காரணமாயிருக்கக் கூடுமா? அது எனக்குக் கொஞ்சம் ஸந்தேஹந்தான். ஆனால் தாங்கள் நேரே சொல்லும்போது அதைப்பற்றிப் பேசுவது தவறு. அது போகட்டும். நீங்கள் வெகு சிரமப்பட்டு இங்கு வந்திருப்பதால், முதலில் இளைப்பாறும். பின் எல்லாம் ஸாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்" எனச் சொல்லி ருதுபர்ணருக்குத் தனி விடுதி ஒன்றுவிட வீமராஜன் ஏற்பாடு செய்தான். அன்புடன் உபசாரஞ்செய்த வீமரிடம் செலவு பெற்றுக்கொண்டு தனக்காக விடப்பட்ட தனி விடுதியை யடைந்து, அவன் எண்ண மிட்டுக்கொண் டிருந்தான். வார்ஷ்ணேயனும், வாகுகனும் ருதுபர்ணனைத் தனி விடுதியில் விடடதும், தேரை அதை விடும் சாலையில் விட்டு, குதிரைகளை அவிழ்த்து விட்டனர். கடுவேகத்துடன் ஓடியிளைத்திருந்த அக்குதிரைகளை வாகுகன் தட்டிக் கொடுத்து, உபசாரங்கள் செய்தானதும், அத் தேர்த்தட்டின் மீது ஏறி உட்கார்ந்தான்.

வாகுகனையும் வார்ஷ்ணேயனையும் ருதுபர்ணனையும் அம்மாடி மீதிருந்து கண்ட தமயந்தி, தன் கணவனைக் காணாது சிந்தைக்காளானாள். "என்ன மாயமிது! என் காதே எனக்குப் பொய்த்துவிடுமோ என்னவோ தெரியவில்லை. அப்பொழுது கேட்ட சப்தம் நளமன்னவர் தேரோட்டும் ஒலியல்லவென்று என்னால் நம்ப முடியவில்லை. அப்படி யில்லாவிட்டால் அத்தேரோசை யாரால் கிளம்பியிருக்கும்? என் முன்னோ, நளமன்னவரைக் காணமுடியவில்லையே. அப்படியிருக்க, அது ருதுபர்ணரிடம் வேலை செய்வதற் கமர்ந்த வார்ஷ்ணேயன் தேர்செலுத்தும் ஒலியா? நெடுநாள் பழகித் தன் தலைவருடைய தேரோட்டும் வித்தையைக் கற்றுவிட்டனனோ? ஒருவேளை யதனால்தான் அத்தேரொலி அப்படி யிருந்ததுவோ? அல்லது, ருதுபர்ணர்கூட நளமன்ன

---

யாகும். ஆனபடியால், வாதிகள் பிரதிவாதிக் கேற்பட்ட நஷ்டத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டியது தர்ம ஸம்மதமானபடியால் அப்படியே தீர்ப்புச் செய்திருக்கிறேன்."

இத்தீர்ப்பைக் கேட்டதும், ஜனங்கள் விக்கி விக்கிச் சிரித்து வயிறு புண்ணானார்கள்.

---

உழவுமாடானால். ஊருக்குள்ளே விலைப்படாதா?

8382

வரைப் போலவே தேர்விடுவதில் சமர்த்தரா? அதனால்தான் அந்தச் சப்தம் நளரோட்டும் போது ஏற்படும் நாதத்தையே யுண்டாக்கியது போலிருக்கிறதோ? என்னவோ! யாருக்குத் தெரியும்?"—இவ்வாறு அவள் சிந்தித்தாளானாலும், அவள் மனத்துள், அன்று நிச்சயமாகத் தான் தன் தலைவனைக் காணமுடியும் என்ற நம்பிக்கை உள்ளூற வேலைசெய்து கொண்டே யிருந்தது.

எனவே, அவள் தன் தோழியாகிய கேசினியைத் தருவித்துச் சொல்லலுற்றாள்:—

"அடி கேசினி! அதோ தேர்மேல் விகார உருவத்துடனும் சூம்பிய கையுடனும் இருக்கிறாரே, அவரை யாரென அறிய என் மனம் விரும்புகிறது. அவர் நளராகவே இருப்பரோ என்று எனக்குப் பெரும் ஸந்தேஹம். அவரைப் பார்க்கப் பார்க்கப் பெரிதும் என் மனம் களிப்படைகிறது; என் உள்ளம் கவலையற்று விளங்குகிறது. அவரிடம் உன் இயற்கை சாதுர்யத்துடன் பேசி, அவர் இன்னார் என, நீ அறிந்து வரவேண்டும். அது மாத்திரமல்ல. பேச்சுமுடியும்போது முன் பர்ணாதர் சொல்லிய மொழிகளையே சொல்லு. அப்பொழுது சொல்லும் மறுமொழியைச் சொல்லிய தெப்படியோ அப்படியே இங்குவந்து கூறுவாயாக!" இம்மொழிகளைக்கேட்ட கேசினி உடனே தன் தலைவியின் விருப்பத்திற்கிணங்கி, வாகுகர் இருக்குமிட மடைந்தாள்.

"மனிதருள் பெரியவரே! நீர் வாழ்வீராக! உமது வரவு எங்கும் நன்மையே பயக்கும் என்பது என் நம்பிக்கை. பெண்ணொருத்தி உம்மிடம் வந்து பேசுவதை மன்னித்தெமக்கு மறுமொழி யளிக்கவேண்டும். எங்கள் அரசர் மகள் தமயந்தி, உம்மைச் சில விஷயங்கள் கேட்டுவரச்சொன்னதால் நானிங்கு வந்தேன். அந்த அம்மாள் சொல்லியனுப்பிய ஸமாசாரமுண்டு சில. அவற்றைக் கேட்டுத் தகுந்த மறுமொழி கூறுவீர் என நம்புகிறேன். தமயந்தி யவற்றைக் கேட்க வெகு ஆவலா யிருக்கிறாள்—" என்று சொல்லிக் கொண்டிருந்தாள் கேசினி.

"எமதரசர் ருதுபர்ணர்; அயோத்திக்கு அரசர்; அவர் தமயந்திக்கு நாளை இரண்டாம் ஸ்வயம்வரம் நடப்பதாகக் கேள்விப்பட்டு, தமது உத்தம புரவிகளை நம்பி இன்று காலை புறப்பட்டு இப்போதிங்கு வந்தடைந்தார்—' என்றான் வாகுகன்.

"நீங்கள் இங்குவந்தவர் மூவருள் இரண்டு பேர்களே இங்கிருக்கிறீர்கள். இன்னொருவர் எங்கே? நீங்கள் யார்? அதோ இருக்கிறாரே அவர் யார்?"

"அங்கிருப்பவர் வார்ஷ்ணேயர்; ருதுபர்ணருடைய ஸாரதி. ருதுபர்ணர் தம் விடுதிக்குச் சென்றிருக்கிறார். நானும் குதிரைகளை ஓட்ட வல்லவன்; அத்தொழிலில் நல்ல அனுபவமுண்டென்று நான் சொல்வது தவறாகாது. ருதுபர்ணரிடம் நானாகவே இவ்வேலையில் அமர்ந்து அவரது அன்பிற்குப் பாத்திரனாக இருக்கிறேன்."

"பெரியவரே! நீங்கள் சொல்வது ஸரிதான். இவ்வார்ஷ்ணேயர் முன், நள மன்னவரது ஸாரதியாக இருந்தவரென எமக்குக் கேள்வி. அது உண்மைதான் என்று நம்புகிறேன்."

"ஆம்."

"அப்படியானால் நளமன்னவரை நன்கு அறிவர். ஆகையால் அவரைப் பற்றி எப்பொழுதாவது பேசியிருப்பார் அல்லவா?"

"காலக் கொடுமையால் வறுமையடைந்த நளமன்னவர் குழந்தைகளை இங்கு விட்டு மனைவியுடன் காட்டிற்குப் போனதாகத்தான் அவர்க்குத் தெரியும். ஆனால் தமயந்தி இங்கிருப்பதாக நேற்று ஒரு பிராமணன்சொல்லக் கேள்விப்பட்டதுண்டு. நளரைப்பற்றி வார்ஷ்ணேயன் சொல்லியதாக எனக்கு ஒன்றும் ஞாபகமில்லை."

"ஆனால் நளமன்னவரைப்பற்றி உமக்கு ஒன்றுமே தெரியாதென நான் நம்புகிறேன்."

"நளமன்னவர் மாறுவேஷத்தோடு விளங்குவதாக வதந்தி. அது யார்க்குத் தெரியும்? அவரோடு வாழும் ஆத்மாதான் அவரை அறிய முடியும். வேறு ஆத்மா அவரைக் கண்டு கொள்ளமுடியுமோ முடியாதோ நான் அறியேன். அவரைக் காணும்படி அவர் தமது அங்க அடையாளங்களை வெளியிட்டிருந்தால் அது முடியு மல்லவா?"

"அது போகட்டும். யாரோ ஓர் அந்தணர் ருதுபர்ணர் சபையில் ஏதோ சில மொழிகள் சொன்னாராமே அப்போது தாங்கள் அங்கு தான் இருந்தீரல்லவா?"

"ஆம்; இருந்தேன். அவர் ஏதோ லோகாபிராமமாகச் சில மொழிகள் கூறினார். அதற்கு யான்கூட ஏதோ மறுமொழி கூறினேனென எனக்கு ஞாபகம்."

"இருக்கும். அம்மொழிகளைச் சற்றே ஞாபகப்படுத்திச் சொல்லலாம் அல்லவா? அவைகளைக் கேட்கத் தமயந்தி ஆவல்கொள்கிறாள். தயவுசெய்து அவ்வாவலைப் பூர்த்திசெய்வீரென நம்புகிறேன்."

இம்மொழிகளைக் கேட்ட நளன் அடக்கமுடியாத் துக்கத்திற்காளாகி உள்ளம் அழிந்தான் ஆயினும், அதை வெளிக்காட்டாது, நீர்கசிந்த தன் கண்களைத் தடவிக்கொண்டு "அதற்கொரு தடையுமில்லை. நான் சொன்னது இதுதான். நற்குலத்துதித்த மாதர் தம்மைத் தாமே காப்பவர்; தம்மைவிட்டுக் கணவர் ஒருவேளை பிரிந்தாலும், அவரிடம் அஸூயை கொள்ளார். ஏதோ காலக் கொடுமையால் மயங்கிய கணவன், ஸுகத்தை யொழித்து, சிந்தை யழிந்து, மனைவியைத் தனியே விட்டோடிவிட்டால், அவன்மேல் கோபிப்பது ஸரியா? பறவைகள், கட்டியிருந்த வஸ்திரத்தையும் கவர, சிந்தைநொந்து புத்திமயங்கிய அவன்மேல் அவள் கோபித்தால் என்ன பயனுண்டு? சீலையானால் என்ன, இல்லாவிட்டால்தான் என்ன! பதியை யிழந்து, ஸுகத்தைத் துறந்து, சிந்தை மயங்கி, பசியால் இளைத்து, தன்னுணர்வு கடந்து ஓடியவன்மேல் அவ்வழகி கோபிப்பது சிறிதும் அடாதெனச் சொல்லியதாகவே என் ஞாபகம். இவையல்லாது வேறு ஏதாவது உமக்குத் தெரியவேண்டுமானால் கேட்கலாம்" என்று நளமன்னவர் சொல்லும்போதே அவர் கண்களில் ததும்பிய நீர் அவரது பொறுமைக் கட்டுக்குள் நிலைக்கமுடியாது தத்தளித்து ஆறாய்ப் பெருகிற்று.

அதைக் கவனிக்காதது போலவே கேசினி அவ்விடம் விட்டுப் பெயர்ந்து தமயந்தியிடம் அடைந்தாள். நளமன்னவர் சொன்னதை எல்லாம் அப்படியே சொன்னாள். அம்மொழிகளைக்கேட்ட தமயந்தி துக்கத்துள் ஆழ்ந்தாள்; வாகுகன் நளமன்னவனாகத்தான் இருக்கவேண்டுமென ஸந்தேகங் கொண்டாள்; கேசினியை மீண்டும் வாகுகன் இருக்குமிடம் போய் அவன் நடவடிக்கைகளையும் பூர்வோத்திரங்களையுங் குறிப்பாய்க் கண்டுவரும்படி ஏவினாள்; மேலும் "அவர் இவ்வூர்க்குப் புதிது. உன்னைப் பல பொருள் உதவும்படி கேட்பார் என எண்ணுகிறேன். அவர்க்கு நெருப்பும் நீரையுந் தவிர்த்த பொருளெவற்றையானாலும் கொடு. அவ்விரண்டை மாத்திரம் அவர் என்ன கெஞ்சிக் கேட்டாலும் கொடுக்காதே" என்று எச்சரித்து அனுப்பினாள்; "அடி கேசினி! அவர் செய்வதைக் கண்ணைத் திறந்து பார்த்துவா. ஜாக்ரதை! அவரிடம் என்ன விசேஷமானவற்றைப் பார்க்கிறாயோ அவற்றையெல்லாம் மறக்கா திங்குவந்து சொல்லு. அமானுஷீகமான செயல்கள் அவரிடத் தேதாவதிருந்தால் அதையுங் கவனித்துவா. ஜாக்ரதை!" எனப் பின்னும் வற்புறுத்திச் சொன்னாள்.

அப்படியே காணச்சென்ற கேசினி மீண்டும் தமயந்தியை யடைந்து "அம்மணி! அவ்வாகுகர் வெகு ஆசாரசீலர். அவர் எவ்வாசற்குள் புகுந்தாலும் குனிந்து நுழைவதாகத் தெரியவில்லை. என்ன அதிசயம்! அவ்வாசல்கள் தாமே வளர்ந்து, அவர் நுழைந்ததும், தமது இயற்கையளவை யடைகின்றன. ருதுபர்ணருக்குவிருந்துசெய்யப் பலவிதப்பொருள்கள் நமதரசரால் அனுப்பட்டன. என்ன! அந்தக் காட்சி நான் எங்கும் கண்டதுமில்லை; கண்டதாகக் கேட்டதுமில்லை. அவர் சமையல் செய்யும் திறத்தை எப்படிச் சொல்வது?

ஆதி மறைநூ லனைத்தும் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை.

குடங்களில் நீர் நிரப்பாமலே, அவை தாமே நிரம்பின. அவ்வாறு அவை நிரம்ப அவர் பார்த்த பார்வைதான் காரணம். மற்று அடுப்பில் அவர் எப்படி அனலிட்டாரென்பதைக் கேட்டால் அதிசயப்படாதெவருமிரார். கைப்பிடி வைக்கோலை எடுத்துத் தனக்கெதிரே பிடித்தார். அது தானே தீப்பற்ற அதைக் கொண்டு அவர் அடுப்பில் நெருப்புமூட்டினார். இவ்வதிசயத்தைக்கண்டதும் யான் உம்மிடம் ஓடோடியும் வந்தேன்" என்றாள்; "அம்மணி! ஒன்று சொல்ல மறந்துவிட்டேன். அது இவைகளைக் காட்டிலும் அத்புதம். அவர் ஸாதாரணமாக அக்கினியை வெறுங்கையாலெடுத்து உபயோகப்படுத்துகிறார். அது அவரைக் கொளுத்தாதிருப்பது ஆச்சரியம்! அவ

உழுகிறவன் இளப்பமானால், எருது மச்சினமுறை கொண்டாடும்.

ரது செயல்கள் எல்லாம் விசித்திரமாகவே தோன்றும். அவர் புஷ்பங்களைத் தமது கையாலெடுத்து எவ்வளவுக் கெவ்வளவு மெதுவாகக் கசக்குகிறாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவை வாஸனை பெறுவதோடு, மேலும் மேலும் புதுமலர்போல வாடாமல் வதங்காமல் விளங்குகின்றன. இவற்றைக் கண்டதும் உம்மிடம் வந்து சொல்லும் வரைக்கும் என் மனந்துடித்தது" என மேலுங் கூறினாள்.

இதைக்கேட்ட தமயந்தி, வாகுகன் தன் நாதனாகவே யிருக்கவேண்டுமென நிச்சயித்துக் கொண்டாள். ஆனாலும் தன்னெண்ணம் நிச்சயமோ என முற்றும் பரீட்சிக்க எண்ணங்கொண்டு அவள், "அடீ கேசினீ ! எனக்கெப்பொழுதும் நீ நன்மையே செய்பவள் என்பது நான் சொல்ல வேண்டியதில்லை. நீ மீண்டும் அங்கு ஒருமுறை சென்று அவ்வாகுகர் சமைத்து வைத்துள்ள இறைச்சித்துண்டொன்றை எடுத்து வருவாயானால், அதை நான் பரீட்சிக்க விரும்புகிறேன்" என்றாள்: அவ்வேண்டுகோளுக்கிணங்கி, கேசினியும் அப்படியே செய்தாள். அவள் கொண்டுவந்த இறைச்சியைச் சுவைத்துப் பார்த்தவுடன், தன் நாதனே அதைப் பக்குவப்படுத்தியிருக்க வேண்டுமென அவள் திடமாக நிச்சயித்து விட்டாள்; வாகுகனே தன் நாதன் எனவும் தீர்மானஞ் செய்து விட்டாள். ஆகவே அவள் தன்னிரு குழந்தைகளையும் அவன் முன் அழைத்துப்போய் நடப்பதை வந்துரைக்கும்படி கேசினியை அனுப்பினாள். அக்குழந்தைகள் தன் முன் வரக் கண்டதும்,

மக்களை முன் காணா மனமடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—'மக்காள் நீர்
என்மக்கள் போல்கின்றீர்; யார்மக்கள்? என்றுரைத்
வன்மக் களியானை மன். தான்]

இச்சொற்களைச் சொல்லும்போது அவனுக்குந் தெரியாமல் கண்ணீர் வழிந்தோடின. அவன் மனம் கலக்கமடைந்தது. எனினும், அக்குழந்தைகளை வாரியணைந்து, உச்சி முகந்து, முத்தமரும்பிப் பரவசனானான். அப்போதவன் தன்முன் கேசினி யிருப்பதைக் கவனிக்கவேயில்லை. அவளும் கவனிக்காதுபோலிருந்தாள். ஆனால் அக்குழந்தைகள் அவனைப் பார்த்து, "பெரியவரே! நாங்கள் யாரெனக் கேட்டீரல்லவா? கேளும்.

மன்னவன் நிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னைதனைக் கான்விட் டவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம்; எங்கள் வளநாடு மற்றொருவர்
ஆள்கின்றார் என்றார்" தழுது.

இம்மொழிகள் வாகுகனது மனதைப் புண்ணி விட்ட வேல்போல் துளைத்தன. எனவே, அவன் ஒன்றுந் தோன்றாது தூண்போல் மயங்கி உயிரற்றவன்போல விளங்கினான். அப்போது அவன், உடல் குன்றி விளங்க, கண்களிலிருந்து வழிந்தநீர், பூமியைச் சேறு செய்ய, நற்சிலைபோற் கிடந்தான். ஆனால் அவன் மனம் உள்ளூற வேலை செய்துகொண்டுதா னிருந்தது. அவன் எண்ணாத எல்லாம் எண்ணினான். ஆனால் துக்கம் வரவர விருத்தியடைய அவன் விம்மி விம்மி, கண்ணீர் உகுத்தான்; வாய்விட்டழுதான்; கதறினான். அதைக் கண்ட கேசினி அவனை எற எடுக்கப் பார்த்தாள். அதை யுணர்ந்த வாகுகன் தன் பொறுமையின்மையை எண்ணித் தன்னைத்தானே பழித்துக்கொண்டான்; என்ன காரியம் செய்துவிட்டோமென ஏங்கினான். ஆயினும் அதைப் பாராட்டாதவன் போலத் தன் மடிமீதிருந்த குழந்தைகளைச் சட்டெனக் கீழிறக்கிக் கேசினியை நோக்கி "அம்மணீ! இக்குழந்தைகள் என் குழந்தைகள் போல ஒரே அச்சாயிருப்பதால், இவர்களைக் கண்டதும், காணாத என் குழந்தைகளின் ஞாபகம் என் மனத்தை வாட்ட, ஆடவர்க்கு அடாதவிதம் கண்ணீர்விட்டுக் கதறினேன். வேறொன்றுமில்லை. நீங்களோ இளம்பிராய முடையவரா யிருக்கிறீர்கள். நாங்களோ வெளி நாட்டார்; உம்மைச் சிறிதும் அறியாதவர். இப்படி அடிக்கடி இங்கு வந்தால் ஊரார் பலவிதம் பேசுவார்கள். ஊர் வாயை மூட, உலைமூடி கிடையாதென்பது உங்களுக்குத் தெரியாததல்ல. ஆகவே இங்கு தங்குவதும் தகாது; வருவதும் அடாது. சுகமே உமதரசர்மகளிட மடையுங்கள். குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக்கொண்டு போய் வாருங்கள்" என வினயமாயினும் கண்டிதமாகச் சொன்னான். அவள், குழந்தைகளுடன் தமயந்தியிடம் போனாள்.

உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கேனும் மிஞ்சாது.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS & NOTES

**டெலி போனால் செவிடு.**

பெரியபட்டணங்களில் வெவ்வேறு இடங்களில் இருப்பவர் இருந்த விடத்திலிருந்தே ஒருவரோடொருவர் பேசவென்று, மின்சார உதவியினால்ஏற்படுத்தப்பட்டிருக்கும் டெலிபோன் என்பதை யாவரும் அறிவர். இந்த டெலிபோன் குழலை காதில் வைத்துக்கொள்ளும்போது மின்சாரத் தாக்கினால் காதிலுள்ள சப்தநாளங்கள் அதிர்ச்சியடைந்து காதின் கேட்கும் சக்தி மாறி விடுவதை நாம் அனுபவித்திருக்கலாம். இவ்வாறு ஏற்படும் செவிடு சிறிதுகாலமே விளங்கும்; பலநாளும் இருக்கலாம். இவ்விதமான கஷ்டம் ஏற்படக் காதோடு டெலிபோன் குழலை ஒட்டிவைத்துக் கொள்வதுதான் காரணம். அப்படிக்கில்லாமல் குழலுக்கும் காதுக்கும் காற்றுநடமாட இடைவெளிவிட்டுச் சப்தக்ரஹணஞ்செய்தால்டெலிபோனால் இந்த விபரீத மேற்படாதென்பது வைத்ய நிபுணரின் அபிப்பிராயம்.

***

**தீக்குச்சித் தொழில்.**

இவ்விஷயமாக மைசூரில் ஒரு கனவான் தனியான வழிகள் கண்டு பிடித்திருக்கிறதாகவும், அதைப் போதுமானபடி ஜனங்களுக்கு வேண்டிய அளவு உபயோகப் படுத்த முடியுமெனவும், இந்நாட்டிலேயே இத் தொழிலை முற்றும் ஏற்படுத்த முடியுமெனவும்நாம் கேள்விப்படுகிறோம். அவர்க்குச் சமஸ்தானத்தார் ரூபாய் ஐயாயிரம் கடனளித்திருப்பதாகவும், காட்டில் ஷை தொழிலுக்கு வேண்டிய மரங்களைக் கண்டுகொள்ளச் சௌகர்யங்கள் கொடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது. இவையெல்லாம் இன்னும் பரிசோதனை முறைமையிலேயேயிருப்பதால் எப்படி முடியுமெனச் சொல்ல முடியாது. எனினும், இராஜாங்கத்தாரே உதவ முன் வந்திருப்பது கொண்டாடத் தக்கது. இம்மாதிரி நமது கவர்ன்மெண்டாரும் தொழிலபிவிருத்திக்காக உதவுவது மிக்க நலந்தரும் என்பதை நாம் சொல்லவேண்டுவதில்லை.

***

**சக்கரைத் தொழில்.**

கவர்ன்மெண்டார் வெளியிட்ட தொழிற்சாலைக் கணக்குகளைப் பரிசோதிக்கும்போது, நமக்குப் பல விதமான எண்ணங்கள் தோன்றும். இந்நாட்டுச் சர்க்கரைத்தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று ஆவலுடன் எதிர்பார்ப்பவர் அதைக் காண மனம் வாடுவரென்பது திண்ணம். இந்தியாவில், சர்க்கரை ஆலைகள் மிகவும் குறைவாயிருப்பதையும் தொழிலாளிகள் ஷை ஆலைகளை விருத்திசெய்யக் கொள்ளும் ஆவலின்மையையும் காண்பது பரிதாபமேயாகும். சர்க்கரையை இந்நாட்டு முதற் தொழிலாகச் செய்து இத்தேசத்துக்கு வேண்டிய அளவு அப்பொருளை உதவுவதன்றி வெளிநாட்டாருக்கும் உதவப் பேரவாக்கொண்ட இந்நாளில் ஷை தொழிலை விருத்திசெய்யத் தனவந்தர்களும் புத்திமான்களும் முன்வந்து உழைத்தல் அத்தியாவசியகம். இராஜாங்க உதவியும் இவ்விஷயங்களில் ஊன்றுகோல்போல உதவும் என்பதும் கவனிக்கதக்கது.

***

**கடல் யாத்திரை.**

போர்னியோ த்வீபத்தின் கீழ்ப்பாகங்களில் கிடைத்த சில சாஸனங்களிலிருந்து நம்மவர் முன்நாளில் கடல் யாத்திரை செய்தனரென்பது வெளியாவதாக ஒருவர்மாடர்ன்ரிவியூ பத்திரிகைக்கு எழுதுகிறார். அச்சாஸனங்கள், ஆர்யநாட்டுக்குப்த அரசர்களும், தென்னிந்திய பல்லவச்சோழர்களும், மற்றும் அநேக வைதிக முறையாண்ட பெரியோர்களும் கடலைக் கடப்பது பெருந்தவறாக எண்ணவில்லையென்பதைக்காட்டுகின்றன. அவற்றுள் மிகப்பழைய சாஸனத்தின் காலம் கி. பி. 200. மற்றொரு வடமொழி சாஸனம் கி. பி. நான்காவது நூற்றாண்டில்பத்ரவர்மதர்மராஜன்செய்த யாகத்தைப்பற்றி விஸ்தரிக்கிறது. ஆகவே பிராமணர்களது நாகரீகமும், கொள்கையும் அப்பழைய நாட்களிலும் அயல் நாடுகளில் பரவி வந்தனவென்பது வெளிவரும்.

பஞ்சரத்தினம்.—புதிய பதிப்பு. இந்த அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது. அணா. 12. விவேக போதினிச சந்தாதார்க்கு மாத்திரமே விலை அணா. 10



மஹா கனம் பொருந்திய ராஜபுரம், லார்ட் ஸின்ஹா.